# இலக்கு

www.ilakku.org

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 233 | சனி, மே 06, 2023 | 14 பக்கம்




# தையிட்டியில் நடப்பது என்ன?

பொ.ஐங்கரநேசன் செவ்வி






## முடிசூடும் பிரித்தானிய அரசர் மாட்சிமைக்குரிய 3வது சார்ல்ஸ்

பிரித்தானியத் தமிழர்களுடன் இணைந்து 'இலக்கு'ம் வாழ்த்துகின்றது !

# இலங்கையின் அணிசேரா கொள்கையை மதிக்கின்றோம்

## இலங்கைக்கான ரஷ்ய தூதுவர்

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இலங்கை அரசாங்கம் தற்போது பின்பற்றுகின்ற அணிசேரா கொள்கையை நாம் மதிப்பதாக இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவான் எஸ்.டகர்யான் தெரிவித்துள்ளார்.

மேலும், உக்ரைன் நாட்டை மாத்திரமின்றி யுத்தத்துக்கு அனுசரணை வழங்கும் ஏனைய மேற்குலக நாடுகளையும் ரஷ்யா மீண்டும் தோல்வியடையச் செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது உயிர் நீத்த ரஷ்ய இராணுவத்தினரை நினைவுகூரும் வகையில் கொழும்பில் உள்ள ரஷ்ய

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# வருமுன் காக்கும் பொறிமுறைகளை தமிழ்த் தரப்பினர் ஒருமித்துக் கையாள வேண்டும்

## ரெலோ பேச்சாளர் சுரேந்திரன்

தமிழ் மக்கள் மீதான நில, மொழி மற்றும் கலாச்சார ரீதியான ஆக்கிரமிப்புகள், அழித்தொழிப்புகளை தடுத்து நிறுத்த முன்னேற்பாடுகளை கொண்ட பொறிமுறைகளை நாம் உருவாக்க வேண்டும். அல்லது இருப்பவற்றை பொறிமுறைகளாக் கையாள வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளர் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், நடந்து முடிந்தவைகளுக்காக போராடும் நடைமுறை ஒருபுறம் இருக்க, நடக்கும் முன்னரே தடுத்து நிறுத்தக் கூடிய கட்டமைப்பை தமிழர்கள் உருவாக்க வேண்டும்.

தையிட்டி விகாரை கட்டி எழுப்பப்பட்டுள்ள விவகாரம் இதற்கு சிறந்த உதாரணமாகும். மாகாண சபை முறைமை முடிவுக்கு வந்த பின்னர் இதற்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளது. தனியார் ஒரு சிலருக்கு சொந்தமான காணி நிலங்களிலேயே இந்த விகாரை கட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

# சூடானில் மனிதப் பேரவலம் ஏற்படலாம் - ஐ.நா

சூடானில் போர் நிறுத்த உடன்பாடு முறிவடைந்ததால் அங்கு மோதல்கள் தொடர்கின்றது. இது அங்கு மிகப்பெரும் மனிதப் பேரவலத்தை உருவாக்கும் சாத்தியங்கள் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சூடான் இராணுவத்திற்கும், விரைவு உதவிப் படையினருக்கும் இடையில் கடந்த மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகிய மோதல்கள் தற்போதும் தொடர்கின்றன. இதுவரையில் அங்கு 550 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 4,926 பேர் காயமடைந்துள்ளதாக சூடான் தகவல்கள் கடந்த செவ்வாய்கிழமை (2) தெரிவித்திருந்தன.



மோதல்கள் அரச தலைவர் மாளிகை மற்றும்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

# சுவாசத்தொகுதியை தாக்கும் வைரசுக்கு எதிரான தடுப்பு மருந்து தயார்

சுவாசத் தொகுதியை தாக்கும் Respiratory syncytial virus (RSV) எனப்படும் வைரசுக்கு எதிரான தடுப்பு மருந்துக்கு அமெரிக்காவின் மருந்து மற்றும் உணவுக் கட்டுப்பாட்டு நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.


இந்த வைரஸ் அமெரிக்காவில் பல ஆயிரம் மக்கள் ஆண்டுதோறும் பலியாவதற்கு காரணமாக உள்ளது. எனினும் இந்த தடுப்பு மருந்தை மக்களுக்கு பயன்படுத்துவதற்கான அனுமதியை தொற்றுநோய் தடுப்பு பிரிவு வழங்க வேண்டும்.

பிரித்தானியாவை தளமாகக் கொண்ட ஜி.எஸ்.கே எனப்படும் மருந்து உற்பத்தி நிறுவனம் இந்த தடுப்பு மருந்தை தயாரித்துள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு எதிர்வரும் மாதங்களில் இதனை பயன்படுத்த முடியும்.

இந்த மருந்தின் அனுமதி மூலம் பல ஆயிரம் மக்களை காப்பாற்ற முடியும் என அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு அமைப்பின் ஆய்வுப் பிரிவு தலைவர் வைத்தியர் பீற்றர் மார்க்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நோயினால் 65 வயதுக்கு மேற்பட்ட 10,000 பேரும், 5 வயதுக்கு உட்பட்ட 300 குழந்தைகளும் அமெரிக்காவில் ஆண்டுதோறும் இறக்கின்றனர்.

# ரஸ்ய அதிபரை கொல்ல முயற்சி - மறுக்கிறது உக்ரைன்



ரஸ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் உள்ள அரச கட்டிடங்கள் மீது உக்ரைனின் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் கடந்த புதன்கிழமை (3) மேற்கொண்ட தாக்குதல் என்பது ரஸ்ய அதிபரை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் என ரஸ்யாவின் அரச தரப்பு பேச்சாளர் தெரிவித்துள்ளர்.

எனினும் தாம் அவ்வாறு ஒரு தாக்குதலை மேற்கொள்ளவில்லை என பின்லாந்துக்கு பயணம் மேற்கொண்டிருந்த உக்ரைன் அதிபர் வொலடீமிர் செலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பின்லாந்து பயணத்தின் பின்னர் அவர் நெதர்லாந்து சென்று அனைத்துலக குற்றவியல் நீதி மன்னறத்தில் பேசியுள்ளார்.


இரண்டு சிறிய ரக விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகவும், ஆனால் தமது இலத்திரனியல் பாதுகாப்பு பொறிமுறைகள் அதனை தடுத்து விட்டதாகவும், தாக்குதல் இடம்பெற்ற சமயம் ரஸ்ய அதிபர் விளாடீமீர் புட்டீன் அங்கு இருக்கவில்லை எனவும் ரஸ்யா தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலுக்கு தகுந்த நேரத்தில் பதிலடி கொடுக்கப்படும் எனவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே இரு தரப்பும் பல இடங்களில் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மூலம் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன. பல இடங்களில் எரி பொருள் களஞ்சியங்கள் சேதமடைந்துள்ளன.

# சுவிஸ் அரசு மீது ஆசியா முதலீட்டாளர்கள் வழக்கு

கடந்த மார்ச் மாதம் வீழ்ச்சி கண்ட சுவிற்சலாந்தின் மிகப்பெரும் வங்கியான கிறடிற் சுவிஸ் தொடர்பில் சுவிற்சலாந்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிராக ஆசியா முதலீட்டாளர்கள் சுவிஸ் அரசு மீது வழக்கு தொடுத்துள்ளனர்.




இந்த வங்கியின் வீழ்ச்சியை தடுப்பதற்கு அதனை மற்றுமொரு வங்கியான யூ.பி.எஸ் உடன் இணையுமாறு சுவிஸ் அதிகாரிகள் வற்புறுத்தியிருந்தனர். இந்த முயற்சி முதலீட்டாளர்களின் 17 பில்லியன் டொலர்களை இல்லாது செய்திருந்தது.

எல்லாம் விரைவாக இடம்பெற்று முடிந்துவிட்டது. நான் 500,000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வங்கி முறிகளை பெற்றிருந்தேன். வங்கி நெருக்கடியை கடந்த ஜனவரி மாதம் சந்தித்தபோதும் அவர்கள் என்னை நம்ப வைத்தனர் என சிங்கப்பூரை சேர்ந்த முதலீட்டாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இவ்வாறான வங்கி முறிகள் வங்கிகள் வீழ்ச்சியடையும் போது முற்றாக இல்லாது செய்யப்படும். அதாவது முதலீட்டாளர்கள்பணம்முழுவதை

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# ஈரான் அதிபர் சிரியா பயணம் - உடன்பாடும் கைச்சாத்து

எரிபொருள் மற்றும் ஏனைய வர்த்தகம் தொடர்பில் சிரியா மற்றும் ஈரான் அதிபர்களுக்கு இடையில் நீண்டகால வர்த்தக உடன்பாடு ஒன்று இந்த வாரம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

13 வருடங்களுக்கு பின்னர் ஈரானின் அதிபர் சிரியா சென்றுள்ளது முக்கிய திருப்பமாக பார்க்கப்படுகின்றது. ஈரான் அதிபர் இப்ராஹீம் ராசி அவர்களுக்கும் சிரிய அதிபர் பசார் அல் அசாட் அவர்களுக்குமிடையில் பல உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டு அரபுலகின் வசந்தம் என்ற போர்வையில் அமெரிக்கா சிரியாவில் மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிராக ஈரான் சிரியாவுக்கு உதவியிருந்தது. பெருமளவான படையினரை அனுப்பியதுடன், ஆயுத உதவிகளையும் வழங்கியிருந்தது. மேலும் பொருளாதாரத்தை தக்க வைப்பதற்கான உதவிகளையும் வழங்கியிருந்தது.



ரஸ்யா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் சிரியாவுக்கு ஆதரவாக நின்றதால் சிரியா தப்பிபிழைத்துள்ளது. ஆனால் ஈராக் மற்றும் லிபியா அழிவடைந்துள்ளன. சிரியா அரசு எதிர்தரப்பினால் கைப்பற்றப்பட்ட பெருமளவான நிலப்பரப்பையும் மீள கைப்பற்றியுள்ளது.

இதனிடையே, சிரியாவுக்கும், ஈரானுக்கும் இடையிலான நெருக்கம் உலகிற்கு ஆபத்தானது எனஅமெரிக்காவின்வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## நாங்கள் இன்று ஒன்றாயிருக்க வேண்டிய காலம்

தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களுக்கான தீர்வினை வலியுறுத்தவேண்டிய காலம் என்பதனால் அனைத்து தமிழ் கட்சிகளையும் ஒன்றுபடுமாறு பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் கோரிக்கை விடுத்துள்ளார்

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்

“இந்தியா தனது பாதுகாப்பினையும் தமிழ் மக்களினது உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கு மேலும் மேலும் இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்க வேண்டும் .

2009ஆம் ஆண்டு ஆயுதப்போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் இக்கட்டான சூழ்நிலையில் எந்த பலமும் இல்லாத நிர்க்கதியாக நிற்கும் இந்தவேளையில் நாங்கள் பலமாக ஒற்றுமையாக இருக்கவேண்டிய நேரத்தில் தமிழ் மக்கள் மத்தியில் பல பிளவுகள் காணப்படுகின்றது.இன்று வடக்கு கிழக்கில் ஆயுதபலம் இல்லாத கார ணத்தினால் இலங்கை அரசாங்கத்தினால் எமது நிலங்கள் கபளீகரம் செய்யப்பட்டு வருகிறது.தினமும் வடக்கு கிழக்கு பகுதிகளில் சிங்கள பௌத்தமயமாக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந் தம் மூலம் உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபைகள் இன்று அதிகாரங்கள் இல்லாமல் ஆளுனர்களின் ஆட்சியின் கீழ் இருக்கி ன்றது. ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியாக இருக்கும் ஆளுனர்கள் தாங்கள் நினைத்தவற்றை செய்து கொண்டிருக்கிறார்கள். நூறு வீதம் தமிழர்கள் வாழும் வடக்கின் தையிட்டி பகுதியிலேயே விகாரை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று எமது கிழக்கு மாகாணத்தில் உள்ள புராதன இடங்களான கன்னியா,திருக்கோணேஸ்வரம்,குசனார்மலை போன்ற பகுதிகளிலும் வடக்கில் வெடுக்குநாறி,குருந்தூர்மலை,நாவற்குளி போன்ற இடங்கள் பௌத்த மதம் என்று கூறிக்கொண்டு கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்திய அரசாங்கமானது 13வது திருத்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாணசபையின் முழு அதிகாரத்தினையும் பரவலாக்கி மாகாணசபை தேர்தலை நடாத்தவேண்டும் என்ற அழுத்தத்தினை வழங்கவேண்டும். ஆனால் எங்களுக்குள் ஒற்றுமையில்லை.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கையர்கள் கைது

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற குழுவொன்றை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மன்னார், இஸ்மோக்கன் துறை முனைக்கு அருகில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

ஆண்கள் நால்வரையும் இரண்டு பெண்களையும் மன்னார் காவல் நிலையத்தில் ஒப்படைக்க கடற்படையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 7 மற்றும் 14 வயதுடைய இரண்டு சிறுவர்களும் 16 வயது டைய சிறுமியொருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என காவல்துறையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மன்னார் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய படகின் சாரதியும் அடங்குவார்.

இந்தக் குழுவினர் மன்னார் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈழத்தமிழரின் இறைமை மேலான ஆக்கிரமிப்பை நீக்க கூட்டொருங்கு சனநாயகச் செயற்பாடே ஒரே வழி

இலங்கைத் தீவில் பௌத்த மரபு உரிமைப் பேணல் என்ற சிறிலங்காவின் ஈழத்தமிழர் பண்பாட்டு இனஅழிப்புத் திட்டம் உச்சக்கட்டத்தை எய்தியுள்ளது இதனையே தையிட்டியில் தனியார் காணிகளை அகப்படுத்தி கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரையும் அதனை அகற்றுவதற்கு சனநாயகவழிகளில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஈழத்தமிழ் மக்களின் போராட்டங்களும் அவற்றை அலட்சியம் செய்து, நாங்கள் எதுவும் செய்வோம் எனப் பதிலளிக்கும் பௌத்த தேரர்களின் சர்வாதிகாரப்போக்கும் உலகுக்கு எடுத்துரைக்கின்றது.

இன்று இறைமை என்பது வாழும் மக்களுக்கு அவர்கள் மண்ணின் மேலுள்ள அதிகாரம் என்கின்ற புதிய வரைவிலக்கணம் அனைத்துலக அரசியல் உலகில் நிலைபெற்று வருகிறது. இதனால் ஈழத்தமிழர்க்கு அவர்களின் மண்ணின் மேலுள்ள அதிகாரத்தைப் பறிப்பதன் வழி அவர்களின் இறைமையை இழக்கச் செய்தல் என்பது தான் இன்று சிறிலங்காவின் சமகாலத் திட்டமாகவுள்ளது.

இந்நேரத்தில் தனியாருக்குச் சொந்தமான இந்த இடத்தில் பௌத்த விகாரை அமைப்பதற்கான திட்டஅனுமதியைத் தமிழரசுக்கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமசபை வழங்கியதும் இந்த விகாரை கட்டியெழுப்பப்படுகையில் அதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எதையும் எடுக்காத ஈழத்தமிழர்களின் இன்றையத் தமிழ் அரசியல்வாதிகளும் தான் ஈழத்தமிழர்கள் தங்கள் நிலத்தின் மேலுள்ள அதிகாரத்தை இழக்க ஒவ்வாரு விடயத்திலும் மூலகாரணமாக உள்ளனர்.

2009 சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்புக்குப் பின்னர் உலகின் மனித உரிமைக்கும் அமைதிக்கும் உழைக்கும் மக்கள் அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகம் மூலம் வெளியகப் பொறிமுறை மூலம் பாதிப்புற்ற ஈழத்தமிழர்களுக்கான நீதியைப் பெறுவிக்க முயற்சித்த நேரத்தில் சிறிலங்காவின் சிங்கக் கொடியைத் தலைக்குமேல் தூக்கிப்பிடித்து சிறிலங்காவின் உள்ளகப் பொறிமுறை மூலம் தீர்வு பெறலாம் என உலகுக்கு அறிவித்து சிறிலங்காவின் இறைமையை ஏற்று அதனை மீறி உலகநாடுகளும் உலக அமைப்புக்களும் ஈழத்தமிழர்களுக்கு உதவ இயலாத அரசியல் எதார்த்தத்தை உருவாக்கிக் கொடுத்து மகிந்த கோட்டபாய இனஅழிப்புக் கும்பல் மேல் அனைத்துலகச் சட்டங்கள் பாயாது தடுத்த ராசபக்ச குடும்ப அரசியலின் பாதுகாவலர்தான் சம்பந்தர். இன்றும் மே 9இல் ரணிலுடன் தமிழ் அரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு பேச்சுவார்த்தைக்குப் போய் இன்று ரணில் இந்தியாவுக்கு அது விதித்த சில நிபந்தனைகளை நிறைவேற்றாது போகவியலாதுள்ள நிலையை மாற்ற 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முயல்வதாக காட்ட உறுதுணை செய்யவுள்ளார். தமிழரசுக்கட்சியுடன் பேசியதன் பின்னரே வடக்கு எம்பிக்களுடன் மே 11,12, 13 இல் சந்திப்புவென வடக்கு என்றும் கிழக்கு என்றும் தமிழர் தாயகத்தைத் துண்டாடும் ரணிலின் ராஜதந்திர முயற்சிகளுக்கும் தமிழரசுக்கட்சியின் சந்திப்பு பலமளிக்கும் என்பது உறுதி. இதற்கிடை முன்னாள் வடமகாணசபைத் தலைவர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி உட்பட 12 அங்கீகரிக்கப்பட்ட தமிழ்க்கட்சிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தை நடத்தி 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இடைக்காலசபை யொன்றை அமைக்குமாறு சிறிலங்கா ஜனாதிபதியைக் கோரமுயற்சிக்கின்றனர். இவை எல்லாமே ஈழத்தமிழரின் இறைமையைப் பற்றிப் பேசாது, சம்பந்தரினது சிறிலங்காவின் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சி முறைக்குள் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற கருத்தியலின் விளைவான அரசியல்தான். இதுவே சம்பந்தர் எம் பியாகவுள்ள திருகோணமலையில் தமிழரின் மதமும் மக்கள் தொகையும் மூன்றாவது இடத்துக்குப் போகவைத்துள்ளது. அதன் தொடர்நிலையாகத் தமிழரின் பண்பாட்டு மையமான யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள்ளேயே குருந்தூர்மலை, தையிட்டி வரை சாதாரண பௌத்த பிக்குகளே சர்வாதிகாரிகளாக தமிழரின் பண்பாட்டு இடங்களை இடித்தழிக்கவும் தங்களின் பௌத்த சின்னங்களையும் விகாரைகளையும் தமிழரின் வழிபாட்டிடங்களின் மேலேயே எவ்வித அச்சமோ தயக்கமோ இன்றி கட்டியெழுப்பவும் சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு துணிவு அளித்து வருகிறது. தேசிய சுதந்திர முன்னணி என்ற அமைப்பு இந்துதுவா கொள்கை அடிமைகளால் ஆபத்துக்கு உள்ளாகும் வடக்கு கிழக்கில் பௌத்த மரபுரிமைகளைக் காக்க மகாநாயக்கர்கள் தலையிட வேண்டும் என மதக் கலவரம் ஒன்றை உருவாக்கக் கூடிய முறையில் செயற்படத் தொடங்கியுள்ளது.

மேலும் சீனா இந்தியா என்னும் இருதரப்பிலும் கூடவே பலதரப்பிலும் தான் இணைந்து பணியாற்றுவதாக ரணில் விக்கிரமசிங்கா வெளிப்படுத்தியுள்ள அணிசேராக் கொள்கையை இரஸ்யாவுக்கான சிறீலங்காத் தூதுவர் பாராட்டி உள்ளதும் அல்லாமல் ரஸ்யாவின் வெளிவிவகாரப் பேச்சாளர் அமெரிக்கா இனஅழிப்புச் செய்ததாக நிரூபிக்கப்படும் சிறிலங்கா படையினருக்கு அனைத்துலக சட்டங்கள் மரபுகளுக்கு அமைய நாட்டுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கும் உரிமையினை அந்த ரஸ்யாப் பேச்சாளர் நாட்டின் இறைமைக்குள் தலையிடும் செயலாக விளக்கி அமெரிக்காவுக்கு சிறிலங்காவின் உள்விவகாரத்தில் தலையிட உரிமையில்லையெனப் பகிரங்கமாக அறிவித்துள்ளார். இவ்வாறு ரஸ்யாவைக் கொண்டு அமெரிக்காவைத் தங்கள் சார்பாக எச்சரிக்க வைக்கும் சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா மாட்சிமைக்குரிய பிரித்தானிய அரசர் 3வது சார்ள்ஸ் இன் முடிசூட்டு விழாவில் நாடுகளின் தலைவர்களுள் ஒருவராகக் கலந்து கொள்ளும் அதே நேரத்தில் தன்னோடு எண்மர் கொண்ட இராஜதந்திரக் குழுவொன்றையும் அழைத்து வந்து சிறிலங்கா கடன் பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்கான பிரித்தானியா உட்பட்ட மேற்குலக நாடுகளின் நிதிப்பலத்தையும் மதி வளத்தையும் பெறும் முயற்சியிலும் இறங்கியுள்ளார்.

தொடர்ந்து விரைவில் இந்தியா சென்று கடன் சீரமைப்புத் திட்டத்தை அனைத்துலக நாணய நிதியத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான அனைத்துலக ஆதரவை திரட்டுவதற்கான முயற்சிகளில் ரணில் இறங்கவுள்ளார். அதே வேளை இந்தியாவுக்கு இலங்கையில் எரிபொருள் வழங்கலில் அதற்கிருந்த முற்றுரிமையை இழக்கவைக்கும் சீன, அவுஸ்திரேலிய அமெரிக்க கூட்டு எரிபொருள் வழங்கலை ஒரு மாதத்துள் நடைமுறைப்படுத்தவும் உள்ளார். அவருடைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சீனாவின் 1500 மில்லியன் ரூபா பெறுமதியான வீடமைப்புக்களை யாழ்ப்பாணத்தில் மீனவர்களுக்கு வழங்கி இந்திய இலங்கை கடற்கரையோரத்தில் இந்தியாவின் முற்றுரிமையை மட்டுப்படுத்தும் திட்டத்தைத் தொடங்கவுள்ளார். கூடவே யப்பானையும் ஆசிய அபிவிருத்தி வங்கியையும் மீனவர்களுக்கான நிதியுதவிகளை வழங்க வைத்து இந்தியாவின் முற்றுரிமையை உதவிநிலையையும் கூட மாற்றவுள்ளார்.

இவைகளை எல்லாம் எடுத்து நோக்குகையில் ஈழத்தமிழரின் இறைமை மேலான ஆக்கிரமிப்பை நீக்க, கூட்டொருங்கு சனநாயகச் செயற்பாடே ஒரே வழி என்பதை இலக்கு மீளவும் வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

**ஆசிரியர்**

# மீண்டும் ஒரு பேச்சுவார்த்தையா? தமிழ்க் கட்சிகளின் நிலை என்ன?

**அகிலன்**

இனப்பிரச்சினைக்கு தீர்வைத் தேடுவதற்கான மற்றொரு பேச்சுவார்த்தை அடுத்த வாரத்தில் ஆரம்பமாகவிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. “சுதந்திர தினத்துக்குள் தீர்வு” என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வருட ஆரம்பத்தில் அறிவித்திருந்தார். அதனை இலக்காக வைத்து தொடர் பேச்சுக்களுக்கான ஆயத்தங்களும் செய்யப்பட்டன. 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதுதான் தீர்வு என அறிவிப்பதுதான் ரணிலின் திட்டமாக இருந்தது. ஆனால், 13 க்கு எதிராக பிக்குகள் கிளர்ந்தெழுந்து, 13 ஐ தீவைத்துக் கொழுத்தியதால், அப்போது ரணில் மௌனமாகிவிட்டார்.

இப்போது ஐ.எம்.எப். நிதியை நம்பியிருக்கும் ரணில் சர்வதேச மற்றும் இந்தியாவின் அழுத்தம் காரணமாக மீண்டும் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து பேச முற்படுகின்றார். டில்லி விடுத்த அழைப்பை ஏற்று இந்தியா செல்வதற்கான திகதியைத் தீர்மானிக்க முடியாதவராக அவர் தடுமாறுவதற்கும் இது ஒரு காரணம். அதே வேளையில், ஜனவரியில் ஆரம்பிக்கவிருந்த தீர்வு முயற்சிகள் கைவிடப்பட்டமைக்கு தமிழ்த் தரப்புத்தான்காரணம்எனக்காட்டிக்கொள்வதற்கும் முற்பட்டிருப்பதை அவரது மே தின உரை உணர்த்தியது.



“தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு என்பது, ‘நாடாளுமன்றமே அரசாங்கம்’ என்கிற புரிந்துணர்வின் அடிப்படையில் எட்டப்பட வேண்டும். அதைப் புரிந்து கொள்ளாது, தமிழ்க் கட்சிகள் நீண்ட தூரம் பயணிப்பதால் எந்தப் பயனும் இல்லை” என்று விக்கிரமசிங்க மே தினத்தன்று தெரிவித்தார். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு, பாராளுமன்றத்துக்குள் தீர்வு காணப்பட வேண்டும். அதனை விடுத்து, தீர்வை வெளியில் தேடிக் கொண்டிருக்க முடியாது. அப்படித் தேடுவதாலும் தீர்வு கிடைத்துவிடாது என்பதுதான் அவரது உரையின் சாராம்சம்.

இதனைவிட இந்த உரையில் மற்றொரு அச்சமும் தொக்கி நிற்கின்றது. நாடாளுமன்றம் அனுமதிக்காத எதையும் தீர்வாக தன்னிடம் எதிர்பார்க்க வேண்டாம்; அதற்காக, இந்தியாவையோ, மேற்கு நாடுகளையோ துணைக்கு அழைத்து வந்தாலும், அதனால் எந்தப் பயனும் இல்லை என்பதுதான் அவரது உரையின் சாராம்சம். இதில் தன்னுடைய வரையறை எது என்பதையும் ரணில் விக்கிரமசிங்க மறைமுகமாகச் சொல்லியருக்கின்றார் என்றும் சொல்லலாம். அதாவது, “என்னிடம் எதுவும் இல்லை. நாடாளுமன்றம்தான் தீர்வைத்தர வேண்டியது” என்பதுதான் ரணிலின் செய்தி!

இதன்படி பார்த்தால் தமிழ் மக்கள் தமக்கான தீர்வுக்கு நாடாளுமன்றத்தை நம்பித்தான் இருக்க வேண்டும். ஜனாதிபதியும் இப்போது நாடாளுமன்றத்தை நம்பித்தான் இருக்கின்றார். கடந்த வருடம் இடம்பெற்ற “அரகலய” என்ற மக்கள் கிளர்ச்சியின் போது, ராஜபக்ஷக்கள் அதிகாரத்திலிருந்து துரத்தப்பட்டாலும் கூட, இன்று நாடாளுமன்றம் ராஜபக்ஷக்களின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. 2020 ஆகஸ்ட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 145 ஆசனங்களுடன் வெற்றிபெற்ற மொட்டு அணிதான் இன்றும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ளது.



இது மக்களால் நிராகரிக்கப்பட்ட – மக்கள் ஆணையில்லாத நாடாளு மன்றம் என எதிர்க்கட்சிகள் சொன்னாலும், அரசியலமைப் பின்படி மொட்டு அணிதான் இன்று நாடாளு மன்றத்தை கட்டுப்படுத்துகின்றது. அப்படியா னால், மொட்டுவின் அதாவது ராஜபக்ஷக்களின் சம்மதம் இன்றி தீர்வு இல்லை என்பதைத்தான் ரணில் சொல்ல முற்படுகின்றாரா?

இலங்கையின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், சுதந்திர இலங்கையில் இனவாதத்தை தீவிரப்படுத்துவதில் முக்கிய பங்கை வகித்தது நாடாளுமன்றம்தான். மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்தமை, சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்தமை, பௌத்தத்துக்கு முதலிடம் என்பது உட்பட சிறுபான்மையின மக்களுக்கு எதிரான அனைத்துச் சட்டங்களுக்கும் அங்கீகாரமளித்தது இந்த நாடாளுமன்றம்தான்.

13 ஆவது, 16 ஆவது திருத்தங்கள் மட்டும்தான் தமிழர்களுக்கு ஓரளவுக்கு சார்பானது எனக்கூறக்கூடியதாக நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றவை. இவைகூட இந்தியாவின் கடுமையான அழுத்தங்களின் பின்னணியில்தான் கொண்டுவரப்பட்டன. இலங்கை அரசாங்கமோ அல்லது நாடாளுமன்றமோ அதனை விரும்பிக் கொண்டுவரவில்லை. அதன்பின்னர் கூட, 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது கவனத்துக்குரியது.

ஆக, இனநெருக்கடிக்குத் தீர்வாக நாடாளு மன்றத்துக்குக் கொண்டுவரக் கூடிய எந்வொரு தீர்மானமும் இந்திய அழுத்தத்தால் வந்ததாக இருக்க வேண்டும். அல்லது அதற்கு சர்வதேச நெருக்குதல் இருக்க வேண்டும்.

தற்போதுள்ள நிலையில் ராஜபக்ஷக்களின் செல்வாக்குக்குள் உள்ள நாடாளுமன்றத்தில் 13 ஐ முழுமையாக நிறைவேற்றுவதற்கான தீர்மானமோ அல்லது இன நெருக்கடிக்கான தீர்வுகளோ அங்கீகாரத்தைப் பெறுமா? அதிலும் குறிப்பாக அனைத்துக் கட்சிகளுமே அடுத்த தேர்தலை இலக்காகக் கொண்டு காய்களை நகர்த்தி வரும் நிலையில் மகாசங்கங்களின் சீற்றத்தை எதிர்கொள்ள சிங்களக் கட்சிகள் தயாராகுமா?

ஆக, பிரித்தானியாவுக்கு விமானம் ஏறுவதற்கு முன்னர் ரணில் வெளியிட்ட இந்த அறிவிப்பு சர்வதேசத்தை சமாளிப்பதற்கான ஒன்றாகவே இருக்க முடியும். அதேவேளையில் இந்தியாவுக்கான விஜயத்தையும் அவர் முன்னெடுக்கவிருப்பதாக எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், இவ்வாறான “அறிவிப்புக்கள்” எதிர் பார்க்கக்கூடியவைதான்.

ஜனாதிபதியாக ரணில் பதவியேற்ற பின்னர் இந்தியாவுக்கு விஜயம் செய்வதற்கான அழைப்பை நீண்ட நாட்களாகவே டில்லி விடுக்கவில்லை. 13 ஆவது திருத்தம், அரசியல் தீர்வு என ரணில் பேசத் தொடங்கியிருக்கும் நிலையில்தான் அந்த அழைப்பு வந்திருக்கின்றது. ஆனால், அதற்குள் பிக்குகள் குட்டையைக் குழப்பிட்டார்கள். டில்லிக்குச் செல்லும் போது இரண்டு விடயங்களை மோடி எதிர்பார்ப்பார் என்பது ரணிலுக்குத் தெரியும்.



ஒன்று - 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், இரண்டாவது - மாகாண சபைகளுக்கான தேர்தல் எப்போது என்பது. இந்த இரண்டு விடயங்களுக்கும் தெளிவான பதிலைக் கூறக்கூடிய நிலையில்தான் அவர் டில்லி செல்லவேண்டும். இல்லையெனில் அந்த விஜயம் இராஜதந்திர ரீதியில் தோல்வியானதாகவே முடிவுக்கு வந்துவிடும். டில்லிக்கான விஜயத்தை அவர் காலந்தாழ்த்துவதற்கு இவைதான் காரணமாகச் சொல்லப்படுகின்றது.

இந்த நிலையில் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தை மேசையில் போய் இருப்பதா என்பது தமிழ்க் கட்சிகளைக் குழப்பும் கேள்வியாகவுள்ளது. கஜேந்திரகுமார் பேச்சுவரப்போவதில்லை என்பதை ஏற்கனவே அறிவித்துவிட்டார். ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட தீர்வுக்கு தான் தயாரில்லை என்பது அவரது நிலைப்பாடு.

மற்றைய தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரையில், இப்போதைக்கு 13 ஐ ஏற்போம் என்ற நிலைப்பாட்டில் உள்ளன. அந்தக் கட்சிகள் பேச்சுக்கு போவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. புதுடில்லியும் பேச்சுவார்தை ஒன்று ஆரம்பமாவதை விரும்புவதாகவே தெரிகின்றது. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரைக்கும் இவ்வாறு காலத்தைக் கடத்துவதும், இந்தியாவையும் சர்வதேசத்தையும் சமாளிப்பதும்தான் ரணில் விக்கிரமசிங்கவின் உபாயமாக இருக்கும். ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதனையும் எதிர்பார்க்க முடியாது.

• • •

## உலக பத்திரிகை சுதந்திர தினம்

# ஜனநாயகத்திற்கு வலுச்சேர்க்கும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்

வித்யா

ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டிற்கு ஊடகங்களின் இயல்பான செயற்பாடு உந்து சக்தியாக அமைகின்றது.ஊடகங்களின் பொறுப்பு வாய்ந்த தன்மையானது பல்துறை சார்ந்த சாதக விளைவுகளுக்கும் அடிப்படையாகின்றது.இதேவேளை ஊடக அடக்குமுறைகள் மேலோங்குமிடத்து அது ஜனநாயகத்தை மழுங்கடிப்பதாகவும், நாட்டை சவக்குழியில் தள்ளிவிடுவதாகவும் அமையும் என்பதனையும் மறுப்பதற்கில்லை.இந்த வகையில் பத்திரிகை களின் சுதந்திரத்தை வலியுறுத்தி இன்று (03) உலக பத்திரிகைசுதந்திரதினம்கொண்டாடப்படுகின்றது. இந்த நாள் ஊடக வரலாற்றில் தனித்துவமான ஒரு நாளாக விளங்குகின்றது

உலகில் உள்ள உயிர்கள் ஒவ்வொன்றும் ஏதோவொரு வகையில் தங்களுக்குள் தகவல்களை பரிமாறிக் கொள்கின்றன.பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்கள் பல்வேறு ஒலிகளின் மூலம் தகவல்களைப் பரிமாறுகின்றன.தாவரங்கள் மணம், நிறம் என்பவற்றின் துணையுடன் தகவல் பரிமாற்றம் செய்கின்றன.மனிதன் தனது பேச்சின் வாயிலாக தனது கருத்தை மற்றவர்களுக்குத் தெரிவித்தான்.பின்னர் தனது அறிவின் துணையுடன் பல்வேறு தகவல் தொடர்பு ஊடகங்களை உருவாக்கிக் கொண்டான்.அவற்றின் வாயிலாக எளிமையாக தகவல்களை பரிமாறிக் கொள்கிறான். மொழி தோன்றுவதற்கு முன்பு சைகைகளாலும், ஒலிகளாலும் மனிதன் தனது கருத்துக்களை பரப்பி வந்தான்.நேருக்கு நேர் செய்தி பரப்புவதற்கு சைகைகளையும், ஒலிகளையும் பயன்படுத்திய மனிதன் தொலைவில் உள்ளவர்களுக்கு செய்தி வழங்குவதற்கும் ,நிரந்தர செய்தியாக இருப்பதற்கும் சித்திரங்களை பயன்படுத்தினான். ஒலியை அடிப்படையாகக் கொண்டு பேச்சு மொழியும் சித்திரங்களை அடிப்படையாகக் கொண்டு எழுத்து மொழியும் தோற்றம் பெற்றன. இவ்வாறு தோன்றிய செய்திப் பரவல் தற்காலத்தில் காணப்படும் செய்தித்தாள் அல்லது பத்திரிகை நிலையை அடைவதற்கு பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தன.அச்சுத் தொழிலின் வருகைக்குப் பின்னரே இதழ்கள் வெளிவரத் தொடங்கின.அச்சுத் தொழிலுக்கு அடிப்படையான காகிதத்தை கி.பி.105 இல் சீனாவைச் சேர்ந்த “ சாய்லன் “ என்பவர் கண்டுபிடித்தார்.காகிதம் முதன் முதலில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டதைப் போன்றே அச்சிடும் முறையும் முதலில் சீனாவில்தான் தொடங்கியது என்கிறார் பேராசிரியர் முகிலை இராசபாண்டியன்.

இவ்வாறாக விரிவடைந்த பத்திரிகைத் துறை இன்று ஏனைய ஊடகங்களில் இருந்தும் முதன்மை பெற்ற ஒன்றாக பலரினதும் வரவேற்பினையும் கவனத்தையும் ஈர்த்த ஒன்றாக மேலெழுந்து காணப்படுவது ஒரு சிறப்பம்சமாகும். ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மே மாதம் மூன்றாம் திகதியை உலக பத்திரிகை சுதந்திர தினமாக பிரகடனம் செய்துள்ளது.இச்செயல் பத்திரிகை சுதந்திரத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புநிலையைஉணர்த்துவதற்கும்அதேவேளை உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 19 ஆவது உறுப்புரையின் கீழான கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கான உரிமையினை பாதுகாப்பதற்கும் போற்றுவதற்குமான பொறுப்புக்களை அரசாங்கங்களுக்கு நினைவுறுத்துவதற்குமாகும்.அத்துடன் லின்ட்ஹூக் பிரகடனம் எனப்படும் 1991 இல் ஆபிரிக்க செய்தித்தாள் ஊடகவியலாளர்களினால் வெளியிடப்பட்ட சுதந்திர அச்சு ஊடகக் கொள்கை அறிக்கையின் ஆண்டு நிறைவைக் குறிப்பதாகவும் இது அமைகின்றது.ஆபிரிக்க பத்திரிகைகளால் கூட்டாக 1991 ம் ஆண்டு இந்நாளிலேயே “ பத்திரிகை சுதந்திர சாசனம் “ முன்வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.




இந்தவகையில் இன்று பத்திரிகை சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்றது. இதற்கமைய கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தினை முன்னெடுக்கும் ஆணைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ நிறுவனம் பத்திரிகை சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை சுதந்திரங்களை உலகின் அனைத்து பாகங்களிலும் நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. கருத்துக்கள் எண்ணங்களை கட்டுப்பாடற்ற முறையில் பரிமாறுதல் என்றும் சொற்களாலும் படங்களாலும் சுதந்திரமாக கருத்துக்களை பரிமாறுதல் என்றும் இதுபற்றி யுனெஸ்கோ சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.இந்த உயரிய இலட்சியங்களை ஆண்டு தோறும் மே மாதம் 3 ம் நாளில் உலகளவில் உலக பத்திரிகை சுதந்திர அமைப்பு சார்ந்த ஈடுபாட்டாளர்கள் கொண்டாடி வருகின்றனர்.இதன் வழியே கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திரமும் பத்திரிகை சுதந்திரமும் விழிப்புணர்வு பெற்றன. ஊடகவியலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊடகவியலாளர்களைப் பாதுகாத்தல், குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கான சட்டப் பாதுகாப்புக்கு எதிராக போராடுதல் என்பன குறித்தும் இந்நாளில் கவனம் செலுத்தப்படுகின்றது ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் செய்தி நிறுவனங்கள் செயற்பட வேண்டும் என்று 2012 ம் ஆண்டின் கார்த்தாகே பிரகடனம் உள்ளிட்ட பல பிரகடனங்களும் வலியுறுத்துகின்றன.இதே வேளை 2011 இல் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் ஊடகவியலாளர்கள் தமது பணிகளை சுயாதீனமாக மேற்கொள்வதற்கும் நியாயமற்ற தலையீடுகளின்றி பணியாற்றுவதற்கும் உரிய சூழலை அரசுகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி இருந்ததும் தெரிந்ததேயாகும்.

யுனெஸ்கோ அமைப்பானது UNESCO GUILLERMO CANO என்னும் உலக பத்திரிகை சுதந்திர விருதினை, பத்திரிகை சுதந்திரத்தினை உலகில் எங்கேனும் அல்லது குறிப்பாக தனக்கு வரக்கூடிய ஆபத்தினை எதிர்நோக்கிய நிலையில் பாதுகாப்பதற்கோ மேல்நிலைப் படுத்துவதற்கோ முனைந்த எவரேனும் தனிநபர் அல்லது ஒரு அமைப்பு, நிறுவகம் ஒன்றுக்கு வழங்கி வருகின்றது.1997 இல் இப்பரிசுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி பரிசு கொலம்பியாவின் ஊடகவியலாளர் *Guillermo Cano Isaza* என்பவர் 1986 டிசம்பர் 17 ம் திகதியன்று பொகோட்டா என்னுமிடத்தில் *EL Espectador* செய்தித்தாள் அலுவலகத்தின் எதிரில் வைத்து படுகொலை செய்யப்பட்ட நிகழ்வைக் நினைவூட்டி கௌரவிப்பதற்கென அவரின் பெயரால் வழங்கப்படுகின்றது.கனோவின் எழுத்துக்கள் கொலம்பியாவின் சக்திவாய்ந்த போதைப்பொருள் மன்னர்களை ஆத்திரமடையச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.1997 இல் சீனாவின் ஊடகவியலாளர் காவோ யூ முதன் முதலாக இவ்விருதினை பெற்றுக் கொண்ட நிலையில் 2009 ம் ஆண்டு இலங்கையின் ஊடகவியலாளர் வசந்த விக்ரமதுங்க இவ்வுயரிய விருதுக்கு உரியவரானார்.

உலகளாவிய ரீதியில் ஊடகவியலாளர்கள் சமகாலத்தில் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.ஜனநாயகத்தினைப் பாதுகாக்கும் நோக்கில் அவர்களின் செயற்பாடு காத்திரமானதாக அமைந்திருக்கின்றது.எனினும் அவர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு என்பன எந்தளவுக்கு உறுதிப்படுத்தப்படுகின்றது என்பது கேள்விக்குறியான ஒரு விடயமாகும்.இலங்கையும் இதற்கு விதிவிலக்காக அமைந்துவிடவில்லை. போருக்கு பின்னரான காலகட்டத்திலும் ஊடக ஜனநாயகம்,ஊடக சுதந்திரம் என்பன இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதனை பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.படுகொலை செய்யப்பட்ட, காணாமல் போன ,கடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றம் காணப்படவில்லை.ஊடக நிறுவனங்கள், ஊடகத்துறையின் மீதான தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை செய்யப்படுவதும் விசாரணைகள் இழுத்தடிக்கப்படுவதும் இலங்கையில் வழமையாகிவிட்டது.

ஊடகவியலாளர்களின் தொழில் ரீதியான பாதுகாப்பும் கேள்விக்குறியாகி இருக்கின்றது.ஊடகவியலாளர்களை ஒடுக்கும் நோக்கில் அவர்கள் மீது பல்வேறு வகையான அச்சுறுத்தல்களும் கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்றன.எனவே இவற்றுக்கான தீர்வினை உறுதிப்படுத்துவதோடு, நாட்டின் ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டுக்கு ஊடகங்கள் வழங்கும் சேவைக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஊடக அமைப்புக்கள் பலவும் சுட்டிக்காட்டியுள்ளன. உலகின் பல நாடுகளில் ஊடகவியலாளர்களுக்கான அங்கீகாரம் சிறப்பாகக் காணப்படுகின்றது.அவர்களின் சிறப்பான செயற்பாடுகள் மீது நாடுகள் நம்பிக்கை வைத்துள்ளன.இந்நிலைமை இலங்கையிலும் ஏற்பட வேண்டும் என்றும் அவ்வமைப்புக்கள் மேலும் வேண்டுகோள் விடுத்திருந்தன.இதே வேளையில் இலங்கையின் சரித்திரத்தில் கொலையுண்ட எந்தவொரு ஊடகவியலாளரது கொலை தொடர்பான விசாரணைகளும் முடிவடையவில்லை.எந்தவொரு விசாரணை அறிக்கையும் வெளியிடப்படவில்லை.ஏனைய கொலைகள் தொடர்பாக செயற்படும் சட்டம் ஊடகவியலாளருக்கு எதிரான சம்பவங்களில் செயற்படாதது விசேடமாக குறிப்பிடத்தக்கதாகும் என்று சுதந்திர ஊடக இயக்கத்தைச் சேர்ந்த சீதா

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# தையிட்டியில் நடப்பது என்ன?

**வலிகாமம் வடக்கில் உள்ள தையிட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாரிய விகாரையும், அதனையடுத்துள்ள பொதுமக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதும் தமிழ் மக்கள் மத்தியில் கொந்தளிப்பான ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. இதற்கு எதிராக புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடா்ந்துகொண்டிருக்கின்றது. இந்தப் போராட்டத்தில் பங்கேற்றுக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பொ. ஐங்கரநேசன் அங்கு என்ன நடைபெற்றது? என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது? அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரல் என்ன என்பவை குறித்து உயிரோடைத் தமிழின் தாயக களம் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைத்திருந்தார். அதன் முக்கியமான பகுதிகளை "இலக்கு" வாசகர்களுக்கு தருகின்றோம்.**



## பொ.ஐங்கரநேசன் செவ்வி

**தையிட்டியில் இடம்பெற்ற போராட்டத்தில் நீங்களும் கலந்து கொண்டிருந்தீர்கள். அங்கு உண்மையில் என்ன நடைபெற்றது? என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைக் கூறமுடியுமா?**

வலிவடக்குபிரதேசசபையின்எல்லைக்குள் காங்கேசன்துறை - தையிட்டிப் பகுதியில் இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட பொது மக்களுடைய காணிகளில் பாரிய புத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் புத்த விகாரை அமைக்கப்பட்டுள்ள நிலம் பொது மக்களுடைய நிலம். அந்த வகையில் அது ஒரு சட்டவிரோதமான கட்டுமானம். பிரதேச சபையின் கட்டுமானங்களுக்கான அனுமதி எதுவும் பெறப்படாத நிலையில் உருவாக்கப்பட்டுள்ள ஒரு விகாரை இது. அந்த வகையில் இது ஒரு சட்டவிரோத விகாரை அல்லது கட்டுமானம்.



பொதுமக்களுடைய காணிக்குள் அமைக்கப்பட்டுள்ள இந்த விகாரைக்கு புறம்பாக, விகாரைக்கு வெளியேயும் இன்னும் பொது மக்களுடைய காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் அவற்றையும் சேர்த்தே இவர்கள் அந்த விகாரைக்குரியகாணியாகஎல்லையிட்டுள்ளார்கள்.

இதனைக் கண்டித்தும் இந்த சட்டவிரோத கட்டுமானத்தை - அல்லது பௌத்த விகாரையை அகற்றக் கோரியும் - தங்களுடைய காணிகளை மீளவும் தங்களிடம் கையளிக்கக்கோரியும் தையிட்டியில் அந்தப் பிரதேச மக்கள் ஒரு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். அவர்களுடைய அழைப்பை ஏற்றே நாங்கள் - தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தோம். இதில் தமிழ் அரசியல்வாதிகள், காணி உரிமையாளர்கள் மற்றும் பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

காங்கேசன்துறை வீதியில் உள்ள கலைவாணி சனசமூக நிலையத்தின் முன்பாக இருந்து பேரணியாகச் சென்று சட்டவிரோத விகாரையின் முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அங்கே சட்டவிரோத கட்டுமானத்துக்கு பாதுகாப்புப் படை காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தது. பொதுமக்கள் அதனையும் எதிர்த்து குரலெழுப்பியதுடன் உடனடியாக – தங்களுடைய காணிகள் தங்களுக்கு கையளிக்க வேண்டும் கோரிக்கையை முன்வைத்தார்கள். தமது விவசாய நிலங்கள் அதற்குள் இருக்கின்றன. எந்தவிதமான பயிர்ச்செய்கையையும் அதற்குள் தம்மால் மேற்கொள்ள முடியவில்லை என்பதை வலியுறுத்து அவர்கள் தமது கருத்துக்களைப் பதிவு செய்தார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் இதனை ஒரு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாக அரசாங்கம் முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றது. போர்க் காலத்தில் குண்டுகளை வீசி இனஅழிப்பைச் செய்த அரசாங்கம், இப்போது கட்டமைக்கப் பட்ட இனப்படுகொலையைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். இது ஒரு பண்பாட்டு ரீதியான தாக்குதல்.






தையிட்டிப் பகுதியில் எங்குமே சிங்களவர்களுடைய குடியிருப்பு இல்லை. சிங்கள மக்கள் அங்கு வாழவில்லை. படைத் தரப்பு மட்டும்தான் அங்கு நிலைகொண்டுள்ளது. படைத்தரப்பு எங்காவது படை முகாமுக்குள் புத்த பெருமானுடைய உருவச் சிலையை வைத்து வழிபடலாம். ஆனால், இது அவ்வாறானதல்ல. இது முற்று முழுதாக ஒரு சிங்கள – பௌத்த மேலாதிக்கத்தின் வெளிப்பாடாக – இலங்கையில் இருக்கக்கூடியமிகப்பெரியபௌத்தவிகாரைகளில் ஒன்றாக இது கட்டப்பட்டிருக்கின்றது.



இதன்மூலமாக அவர்கள் என்ன சொல்லவருகின்றார்கள் என்று பார்த்தால், தெற்கில் அம்பாந்தோட்டையிலுள்ள முனையிலிருந்து இங்கு வடக்கில் காங்கேசன்துறை வரையிலான அத்தனை பகுதிகளிலும் பௌத்தம்தான் கோலோச்சுகின்றது கோலோச்ச வேண்டும் என்பதைத்தான் அவர்கள் அழுத்தமாகச் சொல்வதற்காகத்தான் இந்த விகாரையை அமைத்துள்ளார்கள்.

இது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒன்று. ஆனால், இதேபோல வெடுக்குநாறிமலையில் எமது இந்து ஆலயம் அமைக்கப்பட்ட போது நாங்கள் நீதிமன்றம் சென்று எங்களுக்கு சாதகமான தீர்ப்பைப் பெற்றிருந்தோம். ஒவ்வொரு இடங்களாக நாம் நீதிமன்றங்களின் படியேறுவது என்பது சாத்தியமில்லாத ஒரு செயல். ஒட்டுமொத்த தேசமாக நாங்கள் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டும். இது அரசியல்ரீதியானஒருபிரச்சினை. இதுசட்டரீதியான ஒரு பிரச்சினையல்ல. அரசியல் ரீதியாக இந்தப் பிரச்சினையை நாங்கள் வென்றெடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

**வலிகாமம் வடக்கை பொறுத்தவரையில் தையிட்டி எந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரதேசமாக இருக்கின்றது?**

தையிட்டி என்பது ஒரு கரையோரப் பகுதிதான். இது ஒரு மீன்பிடிக் கிராமம், விவசாயக் கிராமம், காங்கேசன்துறை துறை முகத்துக்கு அருகாமையில் இருக்கக்கூடிய ஒரு பகுதி, அவர்கள் அங்கேதான் தவசவன விடுதியையும் அமைத்திருக்கின்றார்கள். வடக்கில் நுழைவாயிலாக இருக்கக்கூடிய ஒரு பகுதி. தமிழகத்துக்கும் அண்மித்த ஒரு பகுதி. அதனால்தான் இராணுவம் இங்கு பெருமளவு காணிகளை சுவீகரித்து வைத்திருக்கின்றது. அவர்களுடைய தளபதிகள் தங்குவதற்கென பாரிய கட்டடத் தொகுதிகளை அமைத்து வைத்திருக்கின்றார்கள்.

எம்மைப் பொறுத்தவரையில் எமது தாயகத்தின் அனைத்துப் பகுதிகளும் முக்கியத்துவம் வாய்ந்தவைதான். அதிலும் தையிட்டி பகுதி என்பது தொழில் சார்ந்த – அதாவது எமது மக்களின் வாழ்வாதார அடிப்படையிலும், அரசியல் - புவியியல் ரீதியாக கேந்திரமாக அமையப்பெற்ற இடம் என்ற வகையில் இந்தப் பகுதியை அரசாங்கம் தனது கைப்பிடிக்குள் - பௌத்த

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## ஏழு தமிழ் கட்சிகள் இணைந்து விடுத்த

# கடையடைப்பு போராட்டம் வெற்றியளித்தது

மட்டு.நகரான்

வடகிழக்கில் அண்மையில் ஏழு தமிழ் கட்சிகள்இணைந்து விடுத்தகடையடைப்பு போராட்டம் வெற்றியளித்தது.தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வடகிழக்கு தாயகத்தில் விடுக்கப்பட்ட அழைப்பானது வெற்றி கரமாக நடந்தது.



இந்த அழைப்புக்காக தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்பட்ட அதேநேரம் தமிழ் தேசிய பரப்பில் செயற்பட்டவர்கள் இதற்கு முழுமையான ஆதரவினையும் வழங்கியிருந் தனர்.இந்த ஒற்றுமையே வடகிழக்கு தமிழர் களுக்கான பலம் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

உண்மையில் இலங்கையின் வரலாற்றில் தமிழர்கள் மிக மோசமான பாதிப்புகளை எதிர் கொள்வதற்கு மிக முக்கியமான காரணமாக அமைந்தது பயங்கரவாத தடைச்சட்டம் ஆகும். தமிழ் இளைஞர்கள் உக்கிரமாக ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுப்பதற்கு ஏதுவான காரணிகளை இந்த பயங்கரவாத தடைச்சட்டமே உருவாக்கிக்கொடுத்தது என்றால் மிகையாகாது.

இலங்கை அரசாங்கத்தினைப்பொறுத்த வரையில் தமிழர்களை அடக்குவதற்கும் ஒடுக்குவதற்கும் கொண்டுவந்ததே இந்த பயங்கரவாத தடைச்சட்டமாகும்.இந்த சட்டத்தின் ஊடாக இந்த நாட்டில் தமிழர்கள் பாரிய அழிவுகளை எதிர்கொண்டதுடன் இன்றும் அடக்குமுறைகளையும் அட்டூழியங்களையும் எதிர்கொண்டே வருகின்றனர்.



அன்று தமிழர்கள் எதிர்கொண்ட அடக்கு முறைகள் மாறுபட்டவைகளாக முன்னெடுக்கப் பட்டுவந்த நிலையில் 2019ஆம் ஆண்டு நடை பெற்ற ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு பின்னர் இந்த சட்டம் முஸ்லிம் மக்கள் நோக்கியும் திருப்பப்பட்டது.கடந்த காலங்களில் பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீடிப்பதற்கான மசோதாக்கள் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டபோது எல்லாம் அதற்கு ஆதரவாக நின்று செயற்பட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 2019க்கு பின்னர் இந்த சட்டத்திற்கு எதிரான போராட்டங்களைக்கூட முன்னெடுக்கும் நிலைமையேற்பட்டது.

இதேபோன்று இந்த சட்டமானது 2022ஆம் ஆண்டு சிங்கள மக்கள் மீதும் திருப்பட்டபோது இன்று சிங்கள மக்களும் இந்த சட்டத்திற்கு எதிராக கிளர்ந்தெழும் நிலைமை காணப்படுகின்றது. கடந்த காலத்தில் எதிர்க்கட்சிகளாகயிருந்தும் பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரும்போது அதற்கு ஆதரவாக நின்ற எதிர்க்கட்சிகள் இன்று அவர்களுக்கு பாதிப்புகள் ஏற்படும்போது அதற்கு எதிராக நின்று போராடும் நிலைமை காணப் படுகின்றது.

இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராக கடந்த 35வருடத்திற்கு மேலாக முன் னெடுத்துவந்த அனைத்துவித அராஜக செயற் பாடுகளுக்கும் துணையாக நின்று முட்டுக் கொடுத்தவர்கள் தமது சமூகத்திற்கு பாதிப்பு ஏற்படும்போது மட்டும் அதற்கு எதிராக போராடும் நிலைமையினை ஏற்படுத்திக்கொண்டனர்.




இந்த அடிப்படையிலேயே புதிய பயங்கர வாத சட்டத்துக்கு எதிராகவும் வடக்கு, கிழக்கிலே நடைபெறுகின்ற பௌத்தமயமாக்கல், ஆலயங்கள் இடிப்பது அல்லது பௌத்த சிலைகளை நிறுவுவது போன்ற அனைத்து விடயங்களுக்காகவும், பூரணமான கடையடைப்புக்கு பொதுமக்கள், பொது அமைப்புக்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முழுமையான ஒத்துழைப்பை, ஆதரவை வழங்க வேண்டும் என்ற தமிழ் கட்சிகளின் கோரிக்கையுடன் வடகிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களிடம் அழைப்பு விடுக் கப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் இலங்கை தமிழரசுக்கட்சியினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் மட்டக் களப்பு மாவட்டத்தில் பூரண கதவடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.திருகோண மலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மக்களின் பகுதிகளில் ஓரளவு மக்கள் ஆதரவு வழங்கியிருந்தனர்.அப்பகுதியில் முறையான முன் னெடுப்புகள் இல்லாமையே இதற்கு காரணமாக அமைந்தது.

இந்த போராட்டத்திற்கு அழைப்பு விடுத் தவர்களில் முக்கியமானவர்களில் ஒருவரான மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கிலே நடைபெற இருக் கின்ற நிர்வாக முடக்கலுக்காக வடகிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றி ணைந்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடி அரசாங்கம் கொண்டு வருகின்ற புதிய பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள்.

கடந்த 4தசாப்தங்களுக்கு மேலாக இந்த பயங்கரவாத தடைச்சட்டம் எந்த அளவு தூரம் தமிழ் மக்களை பாதித்திருக்கிறது, எவ்வளவு தூரம் உயிரிழப்புகள், சொத்தழிவுகளை ஏற் படுத்தியிருக்கிறது என்பதனை நாங்கள் அனு பவித்திருக்கின்றோம்.அதைவிட மிக மோசமான முறையிலே இந்த பயங்கரவாத தடை சட்டம் பாராளுமன்றத்திலே கொண்டு வரப்பட இருக் கின்றது. ஆகவே பாராளுமன்றத்திலே இருக் கக்கூடிய அனைத்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பாராளுமன்றத்திற்கு கொண்டுவந்தால் எதிராக வாக்களிக்க வேண்டும்.

இதுவரை காலமும் தமிழ் மக்கள்தான் இந்த பயங்கரவாத தடை சட்டத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இனியும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைவிட இனிவரும் காலத்தில் தெற்கிலே இருக்கக்கூடிய சிங்கள முற்போக்கு சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள், மாணவர்கள் இந்த புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட இருக்கிறார்கள். தையிட்டி விவகாரமும் இதற்கு பொருந்தும். இன்று பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நடைமுறைப் படுத்தப்படுமானால் அப்பகுதியில் மக்கள் தமது ஜனநாயக எதிர்ப்பினை தெரிவிக்கமுடியாது என்கிறார்.



பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் வடக்கில் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள் கிழக் கில் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள் என்பதையும் பார்க்கவேண்டியுள்ளது. வடக் கினைப்பொறுத்த வரையில் ஜனநாயக ரீதியான போராட்டங்கள் நடக்கும்போது சட்ட ரீதியான தூண்கள் எப்போதும் காவலுக்கு வரும் நிலைமையினை காணமுடியும்.வடக்கில் தமிழ் தேசியம் சார்ந்து பல்வேறுபட்ட சட்ட வல்லுனர் கள் செயற்படும் நிலையில் கிழக்கில் அந்த நிலைமையினை காணமுடிவதில்லை.அதன் காரணமாகவே வடக்கில் பல போராட்டங்கள் உத்வேகத்துடன் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆனால் கிழக்கினைப்பொறுத்த வரையில் அந்த நிலைமையினை காணமுடிவதில்லை.இங்கு கடந்த காலம் தொடக்கம் ஒட்டுக்குழுக்களின் அட்டகாசம்,பாதுகாப்பு பிரிவினரின் நெருக்கடி களுக்கு மத்தியில் தமிழ் தேசியம் சார்ந்தோர் ஜனநாயக ரீதியில் தமது உரிமைக்காக போரா டமுடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.அதற்கு மிக முக்கிய காரணமாக அமைவது தமக்கு ஒரு பிரச்சினையென்றால் யாரும் வரமாட்டார்கள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# யானைப் பசிக்கு சோளப்பொரி

துரைசாமி நடராஜா

பெருந்தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்பு நிலைமைகள் தொடர்பில் நீண்டகாலமாகவேதிருப்தியற்றவெளிப்பாடுகள் இருந்து வருகின்றன.இம்மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 வருடங்களாகியுள்ளபோதும் இவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனை களுக்குள்ளும் குடியிருப்பு பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. இம் மக்களின் "லயத்து" வாழ்க்கை முறை இவர்களின் எழுச்சியில் தாக்க விளைவுகள் பலவற்றையும் ஏற்படுத்தியுள்ள நிலையில் சமூக அந்தஸ்தும் இதனால் வீழ்ச்சி கண்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு இம்மக்களின் பல்துறை எழுச்சி மேம்பாடு கருதி தனிவீட்டுத் திட்டத்தை துரித கதியில் முன்னெடுப்பதற்கு அரசாங்கம் ஆவண செய்தல் வேண்டும்.

"மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நிர்ணயிக்கும் ஏதுக்களில் ஒன்றாக வாழிடம் திகழ்வதுடன், மக்களது முக்கிய அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகவும் இது விளங்குகின்றது. வாழும் கூட்டமும், வாய்ப்பு பொருட்களும் சேர்ந்து வாழிடத்தினை நிர்ணயிப்பதுடன் வாழிடச் சூழல், அயலவர், கிடைக்கும் ஏனைய சேவைகள் யாவற்றையும் உள்ளடக்கியதாக வாழிடம் விளங்குகின்றது.மக்களது உடல் நலத் தினை நிர்ணயிப்பதுடன் மனத்திருப்தியை ஏற் படுத்தவும் வாழிடம் உதவுகின்றது.வாழிட வேறுபாடுகளுக்கு ஏற்ப குழுக்களிடையே வேறுபாடுகள் ஏற்படுவதுடன் சமூக அந்தஸ்தும் அவற்றிற்கேற்ப அமைகின்றது.மக்களது பொருளாதார நிலை விருப்புக்கள் என்பவற்றிற் கேற்ப இவ்வேறுபாடுகள் உருவாகின்றன " என்று வாழிடம் தொடர்பில் பேராசிரியர் நா.வேல்முருகு தனது நிலைப்பாட்டினை தெளிவுபடுத்துகின்றார். ஒவ்வொருவரும் உணவு, அடிப்படை வசதி,மருத்துவ கவனிப்பு, அவசியமான சமூக வேலைகள் உட்பட தமதும், தமது குடும்பத்தினரினதும் ,உடநலத்துக்கும், நல்வாழ்வுக்கும், போதுமான வாழ்க்கைத் தரத் திற்கும் உரிமையுடையவராவர்.அத்துடன் வேலையின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும், அவை போன்ற அவரது கட்டுப் பாட்டுக்கும் அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும், வாழ்க்கைக்கு வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பிற்கும், உரித்துடையவராவர் என்று ஒரு மனிதனது வீட்டுரிமை தொடர்பாக சர்வதேச மனித உரிமை சாசனம் வலியுறுத்துகின்றது.

வீட்டுரிமை தொடர்பில் என்னதான் சட்டதிட்டங்கள் காணப்பட்டபோதும் பெருந் தோட்ட மக்களின் வீட்டு நிலைமைகள் இன்னும் முன்னேற்றம் காணவில்லை என் பது வருந்தத்தக்க ஒரு விடயமாகும்.இவர் களுக்கான தனிவீடு என்பது, கனவு நிலையில் இருந்து வருகின்றபோதும் இந்தக் கனவு அனைவருக்கும் சாத்தியமாகாத நிலையில் இன்னும் பலருக்கு பகற்கனவாகவே இருந்து வருகின்றது.பெருந்தோட்ட மக்கள் ஏற்கனவே 200 வருடங்களுக்கு முன்னதாக இங்கு தொழில் நிமித்தம் அழைத்து வரப்பட்டு பல்வேறு துன்பதுயரங்களுக்கும் முகம் கொடுக்க நேர்ந்தது.தோட்டத்தில் தொழிலாளர் தங்கு வதற்காக கோப்பிக் காலத்தில் நிலையான குடிசைகள் அமைக்கப்பட்டன.இதேவேளை கடந்த நூற்றாண்டில் தொழிலாளர்களின் குடி யிருப்பு நிலைமைகளை கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட அநேகமான வதிவிடங்கள் தற்காலிகமானவையாகவே விளங்கியமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.தோட்டத் தொழி லாளர்களின் சுகாதாரத்திற்கு பங்கம் ஏற்பட்ட மையாலும் , தோட்டத் தொழி லாளர்களின் இருப்பிட வசதிகளில் மாற்றங்களை ஏற்படுத்தி தொழிலாளர்களை நிரந்தரமாக இலங்கையில் தங்கச்செய்வதற்காகவும் 1912 ம் ஆண்டில் பத்தாம் இலக்க நோய்கள் (தொழிலாளர்கள்) கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது.இச்சட்டத்தில் எடுத்துக் காட்டப்பட்ட பிரமாணங்கள், விதிகளுக்கு ஏற்பவே தோட்டங்களில் லயன்களை நிர்மா ணிக்க வேண்டியிருந்தது.இதனால் ஒரே சீரான இருப்பிட வசதிகள் தொழிலாளர்களுக்கு கிடைக் கும் வாய்ப்பு ஏற்பட்டது என்பது புத்திஜீவிகளின் கருத்தாகும்.



தற்போது தொழிலாளர்கள் வாழும் வீடுகளில் 50 வீதத்திற்கும் மேலானவை 1949ம் ஆண்டிற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட வையாகும்..1927 ம் ஆண்டு முதல் 1945 ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட லயன் வீடுகளை இன்றும் எம்மால் அவ தானிக்க முடிகின்றது.1980 காலப்பகுதியில் தொழிலாளர்கள் வசித்த வீடுகளில் சுமார் 89 சதவீதமானவை லயன் வீடுகளே என்று தகவலொன்று வலியுறுத்துகின்றது.தொழிலாளர் களுடைய வசிப்பிடங்கள் பெரும்பாலும் 180 சதுர அடி இடப்பரப்பிலேயே கட்டப்பட்டிருந்தன. எனவே மிகவும் பழைமையான சிறிய வசிப்பிடங்களில் ஒரு சராசரி குடும்பத்தில் ஐந்திற்கும் அதிகமானவர்கள் வாழவேண்டிய துரதிஷ்டமான நிலை காணப்படுகின்றது. தேசிய ரீதியில் சராசரியாக தனியொருவனுக்கு சுமார் 100 சதுர அடி வாழ்விட வசதி காணப்படுகின்றபோதும் தோட்டங்களில் வாழ்வோருக்கு 46 சதுர அடி வாழ்விட வசதியே காணப்படுகின்றது என்று கடந்தகால தகவல்கள் வலியுறுத்துகின்றன.பேராதனை பல்கலைக்கழகம் 1994 காலப்பகுதியில் மேற்கொண்ட ஆய்வொன்றில் தோட்டப் புற குடியிருப்புக்களில் பல்வேறு குறைபாடுகளும் தெளிவாக கண்டறியப்பட்டிருந்தது.

## பிரேமதாசாவின் பாராமுகம்

இலங்கையில் 1970 ம் ஆண்டின் பின்னர் வீட்டு வசதிகளில் ஒரு அபிவிருத்தியைக் காண முடிந்தது.ஜனாதிபதி பிரேமதாசா வீடமைப்பு குறித்து அதிக அக்கறையுடன் செயற்பட்டார். கம் உதாவ, கிராம் எழுச்சி வீடமைப்புத் திட்டம், ஒரு இலட்சம் வீடமைப்புத் திட்டம், பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டம் போன்றவற்றை செயற்படுத்துவதில் பிரேமதாசா முன்னின்றுழைத்தார்.1987 ம் ஆண்டு சர்வதேச வீடமைப்பு ஆண்டாக பிரகடனப் படுத்தப்பட்டமை ஒரு சிறப்பம்சமாகும். இலங்கையில் வீடமைப்பின் பிதாமகனாக பிரேமதாசா விளங்கியபோதும் தோட்டப் புற வீடமைப்பு தொடர்பில் மாற்றாந்தாய் மனப் பான்மையுடனேயே அவர் செயற்பட்டார் என்பதே உண்மையாகும்.தோட்டப்புற மக்களின் கல்வி குறித்து சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா எந்தளவு பாராமுகத்துடன் செயற்பட்டாரோ அவ்வாறே பிரேமதாசாவும் இம்மக்களின் வீடமைப்பு தொடர்பில் செயற்பட்டார் என்றால் மிகையாகாது.1980 களில் தேர்தல் தொகுதிக்கு 100 வீடுகள் என்ற திட்டத்தின் கீழ் இலங்கையின் கொட்டகலை, சௌமியபுரத்தில் 20 வீடுகளும், ஹட்டன், வெலிஓயா, மாணிக்கவத்தையில் 20 வீடுகளுமாக மொத்தமாக 40 வீடுகளே தோட்டங்களுக்கு வெளியே தனித்தனி வீடுகளாக கட்டப்பட்டமையும் நீங்கள் அறிந்ததாகும். இதேவேளை 1971-.1975 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் எல்லாத் துறைகளிலும் 10.5 வீதமான வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.எனினும் பெருந்தோட்டங்களில் உள்ள மொத்த வீடுகளில் 3.2 வீதமானவை மாத்திரமே இக்காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட ன.எல்லாத் துறைகளிலும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் 23.3 சதவீத மானவை 1976 - 1981 காலப்பகுதியில் நிர் மாணிக்கப்பட்டவையாகும். இதேவேளை இக் காலப்பகுதியில் பெருந்தோட்டங்களில் 5.2 வீதமான வீடுகளே நிர்மாணிக்கப்பட்டது. .

ஆரம்ப காலம் தொட்டே தொழிலாளர்களின் வீட்டு வசதிகள் புறக்கணிக்கப்பட்டே வந்துள் ளன.இந்நிலைமையில் இன்றும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை காண முடியவில்லை.இம்மக்களில் பலர் இன்னும் லயன் அறைகளுக்குள்ளேயே தங்களது வாழ்க்கையை தொலைத்துக் கொண்டிருக்கின்றனர்.இதனால் மேலெழும்பும் விபரீதங்கள் தொடர்பில் தொடர்ச்சியான வெளிப்பாடுகள் பல்துறை சார்ந்தோராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.எனினும் காத்திரமான முன்னெடுப்புக்கள் இல்லாமை யானது ஒரு பெரும் குறைபாடாகக் காணப் படுகின்றது.நாள்தோறும் உழைத்துக் களைத் தவர்கள், தேயிலைச் செடிகள் செழிப்புறு வதற்கும், நாட்டின் தேசிய வருவாயை மேம் படுத்துவதற்கும் தன்னையே அர்ப்பணித்த ஒரு சமூகம் நிம்மதியாக உறங்குவதற்கு ஒரு பாதுகாப்பான வீடு இல்லை என்னும் போது அதை விடக் கொடுமை வேறென்ன இருக்கமுடியும்.இவர்களை ஏமாற்றி வயிறு வளர்ப்பதற்கு ஒவ்வொருவரும் கங்கணம் கட்டிக்கொண்டு முன்செல்கின்றார்களே தவிர அவர்களின் பல்துறை அபிவிருத்திக்கும் தோள் கொடுக்க முன்செல்வோரின் பட்டியல் குறைவாகவே காணப்படுகின்றது.விரல் விட்டு எண்ணக்கூடிய அரசியல்வாதிகள் அம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி முன்னோக்கிய நகர்த்தலுக்கு இட்டுச் செல்ல முற்படுகின்றார்கள். இத்தகையோரை ஊக்கு வித்து தொழிலாளர் தோழர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முனைதல் வேண்டும்.

பெருந்தோட்டத் தொழிலாளர் வீட மைப்பு தொடர்பில் அரசியல்வாதிகளின் வாக்குறுதிகள் காற்றில் பறந்துவிட்ட நிலையில் தனிவீட்டு கலாசாரத்தின் சாத்தியப்பாட்டிற்கு இன்னும் எத்தனை காலம், எத்தனை தலைமுறை இம்மக்கள் காத்திருக்க வேண்டியேற்படும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.எனினும் இதனை துரித கதியில் மெய்ப்பிக்க வேண்டிய ஒரு தேவைப்பாடும் காணப்படுகின்றது. இந்தியா தொழிலாளர்களுக்கான வீடமைப்பு தொடர்பில் அவ்வப்போது சிற்சில உதவி களை வழங்கி வருகின்றது.இது " யானைப் பசிக்கு சோளப்பொரி" என்ற நிலையில் அமைந்த போதும் இவ்வுதவிகளை நாம் ஒரு போதும் புறந்தள்ளி விடமுடியாது.இந்தியா கடந்த

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

"காணாததை கண்டிட செய்து, கடிகாரத்தை மறக்க செய்து, ஊரை ஒன்றுசேர்த்து, உலகை சுருக்கிக் கைகளில் தந்திடும் ஊடகம்."

இந்திய அரசியலமைப்பின் முக்கிய கட்டமைப்புகளில் ஒன்றாக ஊடகத்துறை அமைகிறது. நாட்டுநடப்புகள் அனைத்தையும் வெளிச்சத்திற்கு கொண்டுவரும் துறையாக செயல்படுகிறது. உள்ளதை உள்ளபடி, நடந்ததை அப்படியே உலகிற்கு வெளிப்படைத்தன்மையோடு எடுத்துக் காட்டும் உன்னத துறை ஊடகம்.

விமர்சனப் பார்வையில் மக்களுக்குள் தேசத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. செய்திகளின் பின்னணியை அலசி ஆராய்ந்து மக்களின் குரலைத் தட்டியெழுப்புகிறது. தினம் முன்னெடுக்கப்படுகிறது.

**பெண்கள் பங்கு:**


ஊடகத்துறையில் பெண்கள் ஈடுபடுவதும் குறைவு அவ்வாறு பங்கேற்றாலும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றனர். இன்றும் பெண்கள் தங்கள் கட்டுகளை அவிழ்த்து உலகைப் பார்க்க பல தடைகள் உள்ளன. அவற்றில்,

* **'பெண்கள் தானே' என்ற எண்ணம்**
* **'இவர்களால் என்ன செய்திட முடியும்?' என்ற மனநிலை**
* **குடும்ப பின்னணிகள்**
* **பணியில் பாதுகாப்பற்ற சூழல்**
* **பெண்களுக்கு எதிரான பாலியல் அத்துமீறல்கள் ஆகியவற்றை முதன்மையாக கூற லாம்.**

இந்திய உச்சநீதிமன்றம், 1997 இல் பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியியல் துன்புறத்தல் தடுப்புச்சட்டம் 9 டிசம்பர் 2013 அன்று நடைமுறைப் படுத்தப்பட்டது. இதன்மூலம் பாதுகாப்பு சூழல் ஏற்படினும், அதை சரியாக உபயோகிக்கிறார்களா என்பது கேள்வியே. அதிகார துஷ்பிரயோகம் அனைத்து துறைகளிலும் வளர்ந்து வருவதே ஆபத்தான ஒன்றாக அமைகிறது.

அரசின் செயல்பாடுகள், கொள்கைகளை விமர்சிப்பதை தேசவிரோதம் என்று கருதமுடியாது. துடிப்பான ஜனநாயகத்திற்கு பத்திரிகை சுதந்திரம் மிகவும் அவசியம் என உச்சநீதிமன்றம் தற்போதைய அரசிற்கு கூறியது, எனினும் நீதிமன்ற தலையீட்டையும் பின்தள்ளும் நோக்கம் கொண்டதே புதிய தொழில்நுட்ப வரைவு சட்டம்.

அனைவரையும் ஒன்றாக பாவித்து பத்திரிகை சுதந்திரம் வழங்கும் போது பெண்களின் பங்கேற்பும் ஊடகத்துறையில் அதிகரிக்கும். "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்" என்ற பாரதியின் வரிகளை மெய்ப்பிக்கும் வகையில்



# துடிப்பான ஜனநாயகத்திற்கு தேவை பத்திரிகைச் சுதந்திரம்

ஊடகவியலாளர் **நப்பசலையார்**

**அரசின் செயல்பாடுகள்:**

சுதந்திரத்திற்கு முன்பே பத்திரிகை சுதந்திரம் இந்தியர்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டது. அரசிற்கு எதிராக எழும் குரல் எங்கிருந்து வந்தாலும் அது அடக்கப்பட வேண்டும் என்பதை நோக்கமாக வைத்தே பிரிட்டிஷ் அரசு செயல்பட்டது. தற்போதைய அரசும் ஆங்கில ஆட்சிக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்தும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது. பிரதமர் மோடியின் பதவியேற்புக்கு பின் பத்திரிகை சுதந்திரத்தின் தரவரிசை வெகுவாக குறைந்துள்ளது. இதன்மூலம் கருத்து மற்றும் ஜனநாயக சுதந்திரம் தற்போது மறுக்கப்படுகிறது. இதற்கு காரணம்,

1) **பத்திரிகையாளர்களுக்கு எதிரான வன்முறை**
2) **ஆட்சியதிகாரத்திற்கு ஆதரவானவர்கள் ஊடகத்தைக் கையகப்படுத்துதல்**
3) **அரசியல் சார்பு ஊடகமாக மாற்றப்படுதல் போன்றவையே.**

தற்போது மாற்றியமைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப விதிகள் அரசுக்கு சாதகமாக அமைந்தது பத்திரிகை சுதந்திரத்தை பறிக்கிறது. இந்த ஆண்டின் உலக பத்திரிகை சுதந்திர குறியீட்டு அட்டவணையில் இந்தியா 161-வது இடத்திற்கு சரிந்திருப்பது அரசின் செயல்பாடுகளை தெளிவாக உலகிற்கு உணர்த்துகிறது. தாலிபான் ஆட்சி செய்யும் ஆப்கானிஸ்தானை (152வது இடம்) விட பின்தங்கி உள்ளது. இதன் மூலம் ஊடக சுதந்திரத்தை நசுக்கும் நாடாக இந்தியா மாறி வருகிறது என்பது நன்றாக தெரிகிறது.

2016 முதல் 2021 வரை 455 பத்திரிக்கையாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக யுனெஸ்கோ அறிக்கை தெரிவிக்கிறது. 2022ல் மட்டுமே 86 பத்திரிக்கையாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர், அவர்களில் 22 பேர் இந்தியர்கள். உலக அளவில் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் 363 பத்திரிகையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்,இந்திய அளவில் 7 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு, ஊடக சுதந்திரம், நம்பகத்தன்மை உள்ளிட்ட பல்வேறு நலன்களை வலியுறுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 3ஆம் நாள் பத்திரிகை சுதந்திர

கள், வன்முறைகள், சீண்டல்களை தடுத்திட வேண்டி, பெண்கள் பணிபுரியும் அனைத்து நிறுவனங்களில் விசாகா குழு எனும் பெயரில் குழுக்கள் அமைத்திட வேண்டும் என ஆணையிட்டது. பணியிடத்தில் பெண்களை பாதுகாக்க, இந்திய உச்சநீதிமன்றத்தின் விசாகா வழிகாட்டுதல்களின் அடிப்படையில், இந்திய அரசு 2013 இல் பணியிடத்தில் பாலியல் வன்முறை (தடுப்பு, பாதுகாப்பு, குறைதீர்ப்பு) சட்டத்தைக் கொண்டு வந்தது. பாலியல் அத்துமீறல்கள் குறித்த விரிவான விளக்கம் இதில் அமைந்துள்ளது.

பணியிடத்தில் பாலியல் வன்முறை (தடுப்பு,பாதுகாப்பு, குறைதீர்ப்பு) சட்டம், 2013 விசாகா வழிகாட்டுதல்கள் என்பது பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான விசாகா எனும் பெண்ணின் வழக்கில், இந்திய உச்சநீதிமன்றம், 1997 இல் பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியியல் துன்புறத்தல்கள், வன்முறைகள், சீண்டல்களை தடுத்திட வேண்டி, பெண்கள் பணிபுரியும் அனைத்து நிறுவனங்களில் விசாகா குழு எனும் பெயரில் குழுக்கள் அமைத்திட வேண்டும் என ஆணையிட்டது.

விசாகா வழக்கில், பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், துன்புறுத்தல்கள், சீண்டல்கள்தடுப்பது குறித்து, 1997 இல் இந்திய உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள் பாலியல் தொல்லைகள் என்றால் என்ன

பாலியல் துன்புறுத்தல் என்பது வரவேற் கத்தகாத பாலியல் சார்ந்த நடத்தைகளும் உள்ளடக்கியது (நேரடியாகவோ அல்லது உட்குறிப்பாகவோ) அவைகள்:

* **உடலைத் தொடுதல், தொட முயற்சித்தல்**
* **பாலியல் இச்சையை நிறைவேற்றக் கோருவது**
* **பாலியலைத் தூண்டும் விதமாக பேசுவது**
* **ஆபாசப் படங்களை காண்பிப்பது**
* **பெண்களிடம் வரவேற்கத் தகாத பாலியல் ரீதியான வாய்மொழிச் சொற்கள் பேசுவது,**
* **உடல் அசைவுகளை வெளிப்படுத்துவது.**

எனவே, பாலியல் துன்புறுத்தல் என்பது உடல் ரீதியான தொடர்பு இல்லை என அறிந்து கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் பாலியல் வன்முறை

ஊடகத்துறை திகழ வேண்டும். ஆயுதங்களின் வலிமையை விட பேனாவின் வலிமை அதிகம் என்பதை உலகிற்கு உணர்த்த பெண்களின் ஊடக பணி சிறந்தோங்க வேண்டும்.

மனிதனால் முடியாத ஒன்றைக் கூட பேனாவின் முனை முடித்து காட்டும். இத்தகைய வலிமைமிகு பேனா துடிப்பான ஜனநாயகத்திற்கு ஊன்றுகோலாக திகழ்கிறது. எழுத்துகள் துடிப்பான சமூகத்தை உருவாக்கும் வல்லமை கொண்டது. 'உலகமே உன்னை எதிர்த்திடினும் உனது எழுத்துகள் உன்னை பறைசாற்றும்' என்பதற்கேற்ப உலகை ஒன்று சேர்க்கவும், நம்மை பிரதிபலிக்கவும், துடிப்பான சமூகம் உருவாக துடிப்பான எழுத்துகளே துணைநிற்கும் என்பதே நிதர்சனம்.

• • •

சூடானில் மனிதப் ... தொடர்ச்சி...

இராணுவ தலை மையகம் ஆகிய பகுதிகளை சுற்றி இடம்பெறுவதுடன், சூடானுக்கான விநியோகங்களும் தடைப்பட்டுள்ளன. இந்த வாரத்தின் ஆரம்பத்தில் 7 நாட்கள் போர் நிறுத்தம் கொண்டுவர திட்டமிடப்பட்டபோதும், அது வான் தாக்குதல்களினால் கைகூட வில்லை.

அதேசமயம், சூடானுக்கான உணவு விநியோகத்திற்கு இரு தரப்பும் உத்தரவாதம் தரவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பிரிவின் தலைவர் மார்டீன் கிறிபித் தெரிவித்துள்ளார். கடந்த புதன்கிழமை (3) சென்ற விநியோக தொடரணியில் 6 வாகனங்கள் சூறையாடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

போர் ஆரம்பமாகிய பின்னர் இதுவரையில் 100,000 பேர் சூடானை விட்டு வேறு நாடுகளுக்கு சென்றுள்ளனர். 42,000 பேர் எகிப்த்துக்கு சென்றுள்ளனர். அவர்களில் 2300 வெளிநாட்டவர்களும் அடங்குவார்கள்.

# உக்ரைன் போர்:



## ஈராக்கில் ஜோர்ஜ் புஷ்ஷின் தவறுகளிலிருந்து புட்டின் பாடம் படித்தாரா?

பகுதி 01

தமிழில்: ஜெயந்திரன்

சரியாக இருபது வருடங்களுக்கு முன்னர், அதாவது மே 01, 2003 அன்று, ஈராக் நாட்டில் தாம் முன்னெடுத்த முக்கிய இராணுவ நடவடிக்கைகள் ஒரு முடிவுக்கு வருவதாக, "எமது இலக்கு அடையப்பட்டுவிட்டது" என்ற வாக்கியத்தைத் தாங்கிய ஒரு பிரமாண்டமான பதாகைக்கு முன்னே நின்று, ஐக்கிய அமெரிக்காவின் அன்றைய அதிபராகப் பதவி வகித்த ஜோர்ஜ் புஷ், பகிரங்கமான அறிவிப்பு ஒன்றை மேற்கொண்டார். அதற்கு ஆறு வாரங்களுக்கு முன்னர் தான் சட்டவிரோதமான முறையில் அமெரிக்கா அந்த மத்திய கிழக்கு நாட்டை ஆக்கிரமித்திருந்தது.



ஈராக்கின் நகரங்களுக்குள் அமெரிக்க இராணுவத் தாங்கிகள் நகர்ந்துகொண்டிருக்கின்ற ஒரு காட்சியை ஏப்பிரல் மாதம் 9ம் திகதியிலிருந்து பல்வேறு பன்னாட்டுச் செய்தி வலைப்பின்னல்கள் மீண்டும் மீண்டும் ஒளிபரப்பிக்கொண்டிருந்தன. ஈராக்கில் தொடர்ந்து அமெரிக்கா முன்னெடுத்த இராணுவ நடவடிக்கைகளை மீட்டுப் பார்க்கும் போது, மேலுள்ள கூற்றின் உண்மைத்தன்மையை ஒருவரால் ஊகித்தறிய முடியும்.

ஈராக்கின் தலைநகரமான பாக்தாத்தின் வீர்தோஸ் சதுக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த சதாம் ஹ_செயினின் சிலை உடைத்து வீழ்த்தப்பட்ட காட்சி, ஈராக்கிய மக்களின் விடுதலையையும் பாத் கட்சியின் 35 ஆண்டு கால ஆட்சியின் முடிவையும் பறைசாற்றி இருக்க வேண்டும். உண்மையில் ஈராக்கில் அமெரிக்கா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் முடிவாக அது அமையவில்லை. அதற்கு மாறாக, நீண்ட, இரத்தம் தோய்ந்த ஒரு ஆயுதக் கிளர்ச்சிக்குக் கட்டியம் கூறுவதாகவே அந்த நிகழ்வு அமைந்திருந்தது.

ஈராக்கில் அன்று அமெரிக்கா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கை எட்டு வருடங்கள் தொடர்ந்து நீடித்தது மட்டுமன்றி, அந்த மத்திய கிழக்குப் பிரதேசத்தின் உறுதித்தன்மையை சீர் குலைத்ததுடன் பல்லாயிரக்கணக்கான மக்களின் சாவுக்கும் காரணமானது. உண்மையில் அங்கு கொல்லப்பட்ட மக்களின் உண்மையான எண்ணிக்கை ஒருபோதும் கணக்கிடப்படவில்லை.



அன்று, ஈராக்கில் அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் எதிர்பார்த்தது போலவே, ரஷ்ய அரசும், 2022இல் உக்ரேனை ஆக்கிரமித்த பொழுது, விரைவான ஒரு வெற்றியைத் தாம் பெற்றுவிடலாம் என்று எதிர்பார்த்தது.


தம்மை யாருமே வெற்றிகொள்ள முடியாது என்ற மமதையில், ஒரு அணிவகுப்பை மேற்கொள்வது போன்று, நீண்ட அணிகளாக உக்ரேனுக்கு நுழைந்ததனால், அமெரிக்கத் தயாரிப்பான ஜவெலின் ஏவுகணைகளின் இலக்குக்கு ரஷ்ய இராணுவத்தினர் இரையானார்கள். உக்ரேனின் தலைநகரமான கீவ்வின் வீதிகளில் மிக விரைவாக அணிவகுத்து வருவோம் என்று அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் ஒரு வருடம் கழிந்த பின்பும் கூட முடிவின்றித் தொடர்ந்து நீண்டுகொண்டிருக்கும் ஒரு மோசமான போருக்குள் இப்போது அவர்கள் அகப்பட்டிருக்கிறார்கள்.



அமெரிக்க அதிபர் இழைத்த அதே தவறை இன்று ரஷ்ய அதிபரான புட்டினும் இழைப்பதைக் காணமுடிகிறது. அதிபர் புஷ் 20 ஆண்டுகளுக்கு முன்னர் ஈராக்கின் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையையும் ரஷ்ய அதிபர் உக்ரேனின் மீது மேற்கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இந்த இரண்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளிலும் நாம் காணும் ஒற்றுமைகள் எவை? வேற்றுமைகள் எவை?



சுருக்கமான பதில்: உண்மையில் இரண்டு ஆக்கிரமிப்புகளுக்கும் இடையே ஆழமான ஒற்றுமைகள் உண்டு. இரண்டுமே பொய்யான சாக்குப்போக்குகளைச் சொல்லி ஆரம்பிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள். இரண்டிலும் ஐக்கிய நாடுகளின் அதிகாரம் தோல்வியைத் தழுவியிருக்கிறது. ஆனால் இரு சாராரையும் போரை முன்னெடுக்கத் தூண்டிய காரணிகளுள் வேறுபாடுகள் அதிகமாக இருக்கின்றன என்று வரலாற்று ஆசிரியர்களும் ஆய்வாளர்களும் கருத்துத் தெரிவிக்கின்றனர். இரண்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஒரு மரபு ரீதியிலான போரை நடத்துவதில் ரஷ்யாவைவிட அமெரிக்கா வெற்றியடைந்ததைக் காணமுடிகிறது.



அமெரிக்காவின் தலைமையில் ஈராக்கில் போரை முன்னெடுத்த கூட்டணியாக இருந்தாலும்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## உலக பத்திரிகை... தொடர்ச்சி ...

ரஞ்சனி சுட்டிக்காட்டியுள்ளார்.இது இலங்கையில் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு சான்று பகர்வதாகவுள்ளது. ஊடகங்கள் மக்களுக்கு தகவல் வழங்கும், அறிவூட்டும், விழிப்பூட்டும், சிறந்த வாழ்க்கைக்கு வழிகாட்டும் மற்றும் அறிவைப் பகிர்ந்தளிக்கும் கருவியாக செயற்படுகின்றன. இதற்கு மேலதிகமாக மக்கள் குரலாகவும் ஜனநாயகத்தின் காவலனாகவும் ஊடகங்கள் செயற்படுகின்றன.இப்பணிகளைத் தொடர்வதற்கு ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும் என்றும் வலியுறுத்தல்கள் இடம் பெற்றுள்ளன.

அச்சு ஊடகத்தொழில் இன்று பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றது. சுடச்சுட செய்திகளை வழங்குவதில் சமூக வலைத்தளங்கள் முந்திக்கொள்ளும் நிலையில் பத்திரிகைகள் இதற்கு ஈடுகொடுத்து முன்செல்ல வேண்டியுள்ளது.இந்நிலையில் சம்பவங்களுடன் அதிகமான பின்னணிச் செய்திகளையும் பத்திரிகைகள் வழங்க வேண்டிய தேவையும் மேலெழுந்துள்ளது.இவற்றோடு காகிதத்தாள், மை உள்ளிட்ட பல பொருட்களின் அண்மைக்கால விலையேற்றங்களும் பத்திரிகைத்துறைக்கு சவாலாக விளங்குகின்றன.இவற்றுக்கும் மத்தியில் பத்திரிகைகள் தமது இருப்பையும் சுதந்திரத்தையும் பேணி முன்செல்ல வேண்டியுள்ளது.இவற்றோடு ஊடகப் பணியாளர்கள் பலர் குறைந்த வருவாய்க்கு மத்தியிலும் நிறைவான சேவையை வழங்கிவருகின்றமை அவர்கள் ஊடகத்துறையின் மீது காட்டும் அதீத ஈடுபாட்டை புலப்படுத்துவதாக உள்ளது. .

இதேவேளை சுதந்திரமும் பன்முகத் தன்மையும், சுயாதீனமும் கொண்ட ஊடகத் துறைக்கான சட்ட அடிப்படைகளை தொடர்ந்து வலுப்படுத்த வேண்டும்.தகவல்கள் பெருமளவுக்கு கையாளப்படவேண்டிய கால கட்டத்தில் முக்கியமாக இளையோரை முக்கிய திறன்களின் அபிவிருத்தியிலும் ஊடகத்துறை சார்ந்த அறிவூட்டலிலும் ஈடுபடுத்தும் வகையில் நாம் செயற்படுதல் வேண்டும்.உலக பத்திரிகை சுதந்திர தினம் ஊடக சுதந்திரத்தை முன்னெடுக்கும் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு ஆகும்.எனவே சர்வ தேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கேற்ப ஒன்லைன் மற்றும் அனைத்து ஊடகவியலாளர்களுக்குமான கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தினை முன்னெடுக்கும் ஐ.நா. வின் முயற்சிகளில் அரசுகள், துறை சார்ந்த ஊடக அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் இணைந்து செயற்பட வேண்டும்.இது தனிநபர் உரிமைகளுக்கான ஒரு தூணாகவும், ஆரோக்கியமான சமூகங்களுக்கான அத்திபாரமாகவும் சமூகமாற்றத்திற்கான உந்து சக்தியாகவும் உள்ளது என்று முன்னாள் ஐ.நா. வின் செயலாளர் பான் கீ மூன் ஏற்கனவே தெரிவித்திருந்தமை இங்கு மீண்டும் நினைவு கூறத்தக்கதாகும்.

• • •

## சுவிஸ் அரசு ... தொடர்ச்சி ...

யும் இழப்பர்கள். சிங்கப்பூர் மட்டு மல்லாது உலகம் எங்கும் இருந்து பெருமளவான முதலீட்டாளர்கள் சுவிஸ் அரசு மீது வழக்கு தொடுக்க திட்டமிட்டுள்ளனர்.

நானும் எனது மனைவியும் ஓய்வூதிய சேமிப்பை இந்த வங்கியில் வைப்பிட்டிருந்தோம். தற்போது முழுவதையும் இழந்துள்ளோம். எமக்கு இப்போது தூக்கமில்லை. இந்த உலகில் யாரும் இனிமேல் சுவிஸ் அரசை நம்பப்போவதில்லை என மற்றுமொரு ஆசிய முதலீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## வருமுன் காக்கும்... தொடர்ச்சி ...

ஒரு சில உரிமையாளர்கள் வழக்கு தொடுப்பதற்கு ஆர்வமாக முயற்சி செய்த பொழுதிலும் சரியான தரப்பினரிடம் அவர்கள் செல்லவில்லை. அதேபோன்று அரசியல் தரப்பிலும் வழக்கு தொடுப்பதற்கு முயற்சி செய்து சில காணி உரிமையாளர்களை சந்தித்த பொழுது அந்த காணி உரிமையாளர்கள் வழக்கு தொடுப்பதில் அக்கறை கொண்டிருக்கவில்லை.

வழக்கு தொடுப்பதற்கு அக்கறை கொண்ட தனியார் காணி உரிமையாளரும் அரசியல் தரப்பினரும் ஒருவரை ஒருவர் இறுதிவரை சந்திக்கவில்லை. அதனால் விகாரை கட்டப்படும் வரைக்கும் தனியாரால் நடவடிக்கை எடுக்க முடியாத அல்லது அரசியல் தரப்பை நாட முடியாத சூழ்நிலையில் இருந்திருப்பது துரதிஷ்டமே. இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கான ஒரு பொறிமுறை மிக அவசியமாகிறது.

மாகாண சபைக்கான காணி மற்றும் போலீஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டும், ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி பலமான கட்டமைப்பாக மாற்ற வேண்டும் என்ற எமது கோரிக்கையின் பிரதான நோக்கம், அரசியல் தீர்வு எட்டப்படும் வரையில் இப்படியான ஆக்கிரமிப்புகளை தடுத்து நிறுத்த வேண்டும், அதை எம்மீதான ஆக்கிரமிப்புக்கு எதிரான பொறிமுறையாக கையாள வேண்டும் என்பதே. அதை ஒருபோதும் அரசியல் தீர்வாக நாம் கோரவில்லை.

மேலும் நிலைமையை புரிந்து கொண்டு நமக்கான பொறிமுறைகளை வகுக்கவும், இருக்கும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி அதைப் பொறிமுறையாகக் கையாளவும் தமிழ்த் தரப்பு தயாராக வேண்டும்.

இனியாவது தமிழ் மக்கள் ஒன்றிணைந்து நம்மை காக்கும் பொறிமுறைகளை வகுத்துக் கொள்ளவும் இருப்பவற்றை சரியாகக் கையாயவும் முன் வர வேண்டும் என கோரி நிற்கிறோம். அதுவே நிலையான அரசியல் தீர்வு வரும் வரை எமது இனத்தின் இருப்பைத் தக்கவைக்கும்'' என தெரிவித்துள்ளார்.

• • •

## ஏழு தமிழ் கட்சி... தொடர்ச்சி ...

என்ற அடிமனது உண்மையே இன்று கிழக்கில் அதிகரித்துக்காணப்படுகின்றது.

கிழக்கில் பெரும்பாலான தமிழ் சட்டத்தரணிகள் தமது உழைப்பினை மட்டுமே பார்ப்பவர்களாகயிருக்கின்றார்கள்.தமிழ்தேசியம் சார்ந்து செயற்படுபவர்கள் என்று சொல்பவர்கள் ஒரு சிலரும் நீதிமன்றங்களுக்கு சென்றால் தமிழ் தேசியத்திற்கு எதிராக வாதாடிய நிகழ்வுகளும் உள்ளன.

இன்று கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்பது வடக்கினை விட கிழக்கு தமிழர்களுக்கே பாதிப்பு அதிகமாகயிருக்கப்போகின்றது.

பௌத்த மயமாக்கல் வடக்கில் உக்கிரம் பெற்றுவரும் நிலையில் அது கிழக்கில் உக்கிரம்பெறும்போது இந்த சட்டத்தின் ஊடாக அடக்கும் நிலைமையும் ஏற்படும்.கிழக்கில் பெரியளவிலான போராட்டங்கள் நடைபெற முடியாத சூழ்நிலை தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.தமிழ் தேசியம் சார்ந்து செயற்படுவோரின் செயற்பாடுகளே அதற்கு காரணமாக அமைந்திருக்கின்றன.எனினும் இது தொடர்பில் நாங்கள் இங்கு பேசுவதை விடுத்து கிழக்கில் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் சார்ந்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது இவ்வாறான பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்கள் என்பது பாரியளவிலான தாக்கத்தினை செலுத்தும் நிலை காணப்படுகின்றது.

எதிர்காலத்தில் வடக்கில் உள்ளது போன்றதான பௌத்தமயமாக்கல் பாரியளவில் கிழக்கில் ஆக்கிரமிக்கப்படும்போது அதனை தடுப்பதற்கான வலு இல்லாத நிலையில் குறித்த சட்டத்தினை எதிர்ப்பு தெரிவிக்கும் செயற்பாடுகளை கிழக்கில் அதிகப்படுத்த வேண்டும்.அதற்காக தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் அனைவரும் ஒன்றுசேர்ந்து செயற்பட வேண்டும்.

• • •

## யானைப் பசிக்கு ... தொடர்ச்சி...

காலங்களில் தொழிலாளர்களின் தனிவீட்டு கலாசாரத்தின் மேம்பாட்டிற்கு உதவிகளை வழங்கியுள்ள நிலையில் இந்திய வீடமைப்பு திட்டத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கும், இதற்கான மேலதிக நிதியை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இ.தொ.கா.வின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இந்திய அரசின் நிதியுதவியுடன் மலையகத்தில் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்பு திட்டத்தில் ஒரு வீட்டுக்கு 09 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் பணவீக்கம் உள்ளிட்ட காரணங்களால் தற்போது ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கு சுமார் 28 இலட்சம் ரூபா அவசியமாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.எனவே4000 தனிவீட்டுத் திட்டத்தை பூரணப்படுத்துவதற்காக அத்திட்டத்தில் எஞ்சியுள்ள வீடுகளை புதிய மதிப்பீட்டு விலையின் கீழ் நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கையொன்று கடந்த மார்ச் 13 ம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோருக்கு இடையில் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் இவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதும் தெரிந்ததேயாகும். இது பூரணப்படுத்தப்பட்ட தன் பின்னர் பத்தாயிரம் வீட்டுத்திட்டமும் வெகுவிரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாக. அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்திருக்கின்றார்..இதே வேளை தோட்ட வீடமைப்பு பற்றிய கொள்கை நிலைப்பாட்டில்.1972 ம் ஆண்டிற்கு பின்னர் முகாமைத்துவ உரிமை மாற்றத்தோடு சில மாற்றங்களையும் பின்னர் 1990 களில் நிறுவன ரீதியான மாற்றங்களையொட்டி குறிப்பிடத்தக்க மாற்றங்களையும் காணக்கூடியதாக உள்ளதாகவும் கருத்துக்களுள்ளன..

தோட்ட மக்களில் பலர் லயத்து கலாசாரத்திற்குள் சிறைப்பட்டு அவல வாழ்க்கை வாழ்ந்து வரும் நிலையில் இன்னும் சிலர் குடிசைகள், தற்காலிக குடில்களில் வாழ்ந்து வருகின்றனர்.வீடற்ற மக்கள் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.இது இம்மக்களை பாதக விளைவுகளுக்கே இட்டுச் செல்வதாக அமையும்.எனவே இதனை கருத்தில் கொண்டு தோட்டப்புற வீடமைப்பு தொடர்பில் ஆட்சியாளர்கள் அதிக கரிசனையுடன் செயற்பட வேண்டும்.இந்நாட்டில் 200 வருட வரலாற்றைக் கொண்ட மலையக சமூகம் அடிப்படை வசதிகளுக்கே குரல் கொடுக்கும் நிலை மாற்றம் பெற்று சகல உரிமைகளும் பெற்ற சமூகமாக அவர்கள் தலைநிமிர வேண்டும் என்பதே சகலரினதும் எதிர்பார்ப்பாகும்.

• • •

## தையிட்டியில்… தொடர்ச்சி …

மேலாதிக்கத்துக்குள் கட்டிவைத்திருக்க வேண்டும் என்று விரும்புவதாகத்தான் நான் பார்க்கின்றேன்.

**வடக்கிலுள்ள ஒரேயொரு துறைமுகம், விமான நிலையம் என்பவற்றுக்கு அருகில் இருப்பதால், பொருளாதார ரீதியாகவும் பெறுமதி வாய்ந்த ஒரு இடமாக தையிட்டியை கருத முடியுமா?**

நிச்சயமாக, பொருளாதார ரீதியாகவும் இது முக்கியத்துவம்வாய்ந்த ஒரு இடம்தான். இதற்கு அண்மித்தாக இருக்கக்கூடிய பலாலி விமான நிலையத்தை இந்திய அரசின் கடுமையான அழுத்தங்களினால்தான் அரசாங்கம் திறந்துவைத்தது. பெரியளவில் அதனை விஸ்த்தரிப்பதற்கான விருப்பம் அரசாங்கத்துக்கு இல்லை. காரணம் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக பயணிகள் வரும்போது தென்னிலங்கைக்கு கிடைக்கக்கூடிய வருமானம் அதிகமாக இருக்கும். பலாலி ஊடக பெருமளவு பயணிகள் வருவது தென்கிலங்கையின்இந்தவருமானத்தைபாதிக்கும். அதனால்தான் பலாலியை பெரியளவுக்கு விஸ்தரிப்பதை அரசாங்கம் விரும்பவில்லை.

ஒருவகையில் தமிழகத்துக்கு அண்மையில் இருக்கும் விமான நிலையமாக இருப்பதால், இப்போது கொழும்பைத் தவிர்த்து நேரடியாக யாழ்ப்பாணம் வந்து பண்பாட்டு ரீதியான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் தமிழகத்துக்கும் எமக்கும் இடையிலான போக்குவரத்து இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இலங்கை அரசாங்கம் விரும்பாத நிலையில் இந்திய அரசாங்கத்தின் கடுமையான அழுத்தங்களுக்கு மத்தியில் இது நடைபெற்றிருக்கின்றது.

அதேவேளையில், இந்தப் பொருளாதார முக்கியத்துவத்துக்கும் அப்பால், பலாலி வரும் விமானங்கள் கடற்பரப்பைத் தாண்டி இறங்குவதற்காக தாழப் பறக்க ஆரம்பிக்கும் போது இந்த விகாரைதான் மிகப்பெரிய ஒரு அமைப்பில் தெரியப்போகின்றது. நூறு அடி உயரத்தில் இந்த விகாரையின் தூபி கட்டப்பட்டிருக்கின்றது. அதாவது ஒரு உளவியல் ரீதியாக இலங்கைக்குள் பிரவேசிக்கும் போது பயணிகளுக்கு நாம் ஒரு பௌத்த நிலத்துக்குள் பிரவேசிக்கின்றோம் என்ற உணர்வை ஏற்படுத்துவதாக இருக்கும். இது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

**இந்த நூறு அடி உயரமான விகாரையை கட்டிமுடிக்க பல மாதகாலம் சென்றிருக்கும். இவ்வளவு நாளும் பிரதேச சபையும், தமிழ்க் கட்சிகளும் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்ற ஒரு கேள்வி எழுப்பப்படுகின்றதே..?**

நிச்சயமாக. அங்கு இடம்பெற்ற போராட்டத்தில் பங்கேற்ற பொதுமக்களின் உணர்வுகளும் இவ்வாறாகத்தான் இருந்தது. இவ்வளவு பாரிய கட்டுமானம் ஒன்று கட்டி முடிக்கப்பட்ட பின்னர்தான், இந்தப் போராட்டம் நடத்தப்படுவது என்பது ஏற்றுகொள்ள முடியாத ஒன்று.

ஆனால், வலி வடக்கு பிரதேச சபைச் செயலாளரிடம் இது தொடர்பான முறைப்பாடு பொதுமக்களால் எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. வழக்கு தாக்கல் செய்வது தொடர்பாகவும் பொதுமக்கள் அவருக்கு அறிவுறுத்தியிருக்கின்றார்கள். ஆனால், வலி வடக்கு பிரதேச சபையின் தலைவர் இவ்விடயத்தில் பொறுப்பற்றவராக இருந்திருக்கின்றார் என்பது துரதிஷ்டவசமானதும், கண்டிக்கப்பட வேண்டியது மாகும்.

• • •

## இலங்கையின் அணி … தொடர்ச்சி…

தூதரகத்தினால் தேசிய பொது நூலகத்துக்கருகில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபிக்கருகில் வியாழக்கிழமை (4) நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே ரஷ்ய தூதுவர் இதனை தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஏற்படுத்தப்பட்ட அழிவுகளை எதிர்கொண்டு உயிர் நீத்த இராணுவ வீரர்களை நினைவுகூரும் நிகழ்வு உலகளாவிய ரீதியில் 11 நாடுகளில் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த 11 நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குகிறது.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அதே போன்று இலங்கை அரசாங்கம் தற்போது பின்பற்றுகின்ற அணிசேரா கொள்கையை நாம் மதிக்கின்றோம் என்றார்.

## நாங்கள் இன்று … தொடர்ச்சி …

இருப்பதையாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் மாகாணசபையின் முழு அதிகாரங்களும் பரவலாக்கப்பட்டு மாகாணசபை தேர்தல் மிக விரைவாக நடாத்தப்படவேண்டும் என்பதில் உறுதியாகயிருக்கின்றோம்.

நாங்கள் இன்று ஒன்றாக இருக்க வேண்டிய காலம், ஒற்றுமையாக இருக்க வேண்டிய காலம். தமிழ் தேசிய கூட்டமைப்பு கூட இன்று பிரிந்துகிடக்கின்றது.தமிழ்தேசிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்துசென்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றாகி நாங்கள் எமது உரிமைகளை பெறுவதற்காக போராடவேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நாங்கள் இருக்கின்றோம் என்பதை அனைத்து தமிழ் தரப்பினரும் உணர வேண்டும்"என்றார்.

## உக்ரைன் போர்… தொடர்ச்சி …

சரி, அல்லது ரஷ்யாவாக இருந்தாலும் சரி, தமது படைப்பலம் தொடர்பாக அவர்கள் கொண்டிருந்த மமதை உணர்வுதான் இருசாராரையும் போருக்கு இட்டுச் சென்றிருக்கிறது" என்று கலிபோர்ணியாப் பல்கலைக்கழகத்தில், ஈராக்கிய வரலாற்றுப் பேராசிரியராக விளங்குகின்ற இப்ராஹிம் அல்-மறாஷி கருத்துத் தெரிவித்தார்.

போரில் ஈடுபட்ட இந்த இரு தரப்பினருமே தமது எதிரி நாட்டின் தலைமையை இலகுவாக அகற்றி, தங்களது நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கக்கூடிய, தமது சொந்த நலனைக் கவனிக்கக்கூடிய அரசை நிறுவலாம் என்ற எண்ணத்துடனே தான் தமது ஆக்கிரமிப்பை மேற்கொண்டிருந்தார்கள்.

"அமெரிக்காவைப் பொறுத்தவரையில் ஈராக்கின் தலைமையை அவர்களால் அகற்ற முடிந்தது. ஆனால் ஈராக்கின் மக்கள் தொடர்பாக அவர்கள் தப்புக்கணக்குப் போட்டிருந்தார்கள்" என்று அல்-மறாஷி தெரிவித்தார். சதாம் ஹ_செயினின் ஆட்சியைக் கவிட்டு, தம்மை விடுவிக்க வந்தவர்களாக ஈராக் மக்கள் தம்மைப் பார்ப்பார்கள் அமெரிக்கா எண்ணியது. ரஷ்யா என்ன யோசித்தது? இந்த பாசிச ஆட்சியை அகற்றுவதனூடாக உக்ரேன் மக்கள் தம்மை மீட்பர்களாக வரவேற்பார்கள் என்றே அவர்கள் எண்ணியிருந்தார்கள்.

இரண்டு சந்தர்ப்பங்களிலும் விளைவு ஒன்றாகவே இருந்தது. இரண்டு அதிகாரமையங்களையும் தலைகுனிய வைக்ககூடிய விதத்தில் மக்களின் தேசிய எழுச்சி வடிவெடுத் திருந்தது. அவர்களது மமதை பல வழிகளில் வெளிப்பட்டது,

புஷ் நிர்வாகத்தின் மூத்த அதிகாரிகள், ஈராக்கை ஆக்கிரமிக்கும் முடிவை மேற்கொண்ட பொழுது, ஈராக்கிய ஆட்சியைக் கவிழ்ப்பதிலேயே அவர்களது கவனம் முற்று முழுதாகவிருந்தது, இதன் காரணமாக அவர்கள் எதிர்பார்க்காத விளைவுகள் தொடர்பாக அவர்கள் அலட்சியமாக இருந்தார்கள் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

அதுமட்டுமன்றி, அவர்களால் சகிக்க முடியாத பல உண்மைகளையும் பார்க்க முடியாதவாறு அவர்களது கண்கள் மறைக்கப் பட்டிருந்தன. ஒரு வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் ஊடகவியலாளர் றொண் சுஸ்கின்டுக்கு கூறிய வார்த்தைகளிலிருந்து இது தெளிவாகின்றது. "இப்போது நாங்கள் ஒரு சாம்ராஜ்யமாகவிட்டோம். நாம் செயற்படும் போது, எமது யதார்த்தத்தை உருவாக்குகின்றோம்." என்று அந்த அதிகாரி கூறியிருந்தார்.

தமது சொந்த யதார்த்தத்தை உருவாக்குவது என்பது பன்னாட்டுச் சட்டத்தையும் ஐக்கிய நாடுகளின் சாசனத்தையும் மீறுவதையே குறிக்கும். அமெரிக்காவானாலும் சரி ரஷ்யாவானாலும் சரி இரண்டு நாடுகளுமே இந்த சாசனம் உருவாக்கப்பட்ட போது அதில் ஒப்பம் இட்ட நாடுகளாகும். இந்த போர்க்குணம் நிறைந்த நாடுகள் இறைமையுள்ள இரு நாடுகளை தாக்குவதை இரண்டாம் உலகப் போரின் பின்னர் அமைக்கப்பட்ட உலக ஒழுங்கமைப்பினால் தடுக்க முடியவில்லை.

ரஷ்யாவும் சரி அமெரிக்காவும் சரி பொய்யான சாக்குப் போக்குகளைச் சொல்லித்தான் போரைத் தொடங்கினார்கள். அமெரிக்காவையும் அதன் நெருங்கிய நட்பு நாடான ஐக்கிய இராச்சியத்தையும் எடுத்து நோக்கும் போது, அவர்களது சந்தேகத்துக்குரிய புலனாய்வு, சதாம் ஹ_செய்னை அல்கைடாவை ஆதரிப்பவராகவும், பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களை வைத்திருப்பவராகவும் ஒரு பன்னாட்டுப் பயங்கரவாதியாகவும் சித்தரித்தது.

அல்-மறாஷிக்கு இது தொடர்பாக நேரடியான அனுபவம் இருக்கிறது. ஈராக்கை ஆக்கிரமிப்பதை நியாயப்படுத்த எழுதப்பட்ட ஒரு கட்டுரையில் தான் எழுதிய விடயங்கள் களவாடப்பட்டதாக அல் மறாஷி தெரிவித்தார். சதாமை ஒரு சர்வாதிகாரியாகச் சித்தரித்து, அவரது ஆட்சி கவிழ்க்கப்படவேண்டும் என்பது போன்ற ஒரு தோற்றப்பாடு அங்கு ஏற்படுத்தப்பட்டது.

கீவ் நகரத்தில் தங்களுக்கு எதிரான ஒரு நிர்வாகம் இருப்பதாகவும் அந்த ஆட்சி கவிழ்க்கப்படவேண்டும் என்று கூறியதுடன், உக்ரேனின் யூத இனத்தைச் சார்ந்த அதிபரான ஸெலென்ஸ்கியை புதிய நாஸிகளின் ஆட்சிக்குத் தலைமைதாங்கும் ஒருவராகவும் ரஷ்ய சித்தரித்தது.

"நாட்டை ஆளும் போதைப்பொருளுக்கு அடிமையான ஒரு கும்பலிடமிருந்து உக்ரேன் மக்களைப் பாதுகாப்பதே புட்டினின் முதன்மை நோக்கமாக இருந்தது" என்று ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியரான மார்கரெட் மக்மிலன் தெரிவித்தார். போதைக்கு அடிமையான இந்தக் கும்பலுக்கு உக்ரேனிய மக்கள் ஆதரவளிக்கிறார்கள் என்ற உண்மை புலப்பட்ட போது, உக்ரேனிய மக்களுக்கு எதிராகப் போர் திருப்பப்பட்டது.

உக்ரேனின் கிரேமியாக் குடாநாட்டை ரஷ்யாவுடன் இணைத்த நிகழ்வின் முதலாவது ஆண்டைக்கொண்டாடுவதற்காக, ரஷ்யாவின் தலைநகரமான மொஸ்கோவில், கிரெம்ளினுக்கு வெளியே, 2015ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் திகதி புதன்கிழமை ஒரு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. "ரஷ்ய இனத்தைச் சார்ந்த மக்களைப் பாதுகாப்பதையும் தமது தேசத்தின் வரலாற்று வேர்களை மீளப்பெற்றுக்கொள்வதற்காகவுமே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது" என்று புட்டின் அந்த நிகழ்வில் உரையாற்றியிருந்தார்.

**தொடரும்**

**நன்றி: அல்ஜஸீரா**

# புலம்பெயர் தேசங்களின் நடைபெற்ற மே தின புகைப்படங்களின் தொகுப்பு

சுவிட்சர்லாந்து





நோர்வே





ஜெர்மனி





டென்மார்க்



கொலண்ட்





# முடிசூடும் அரசரான 3வது சார்ள்ஸ் அவர்களைப் பிரித்தானியத் தமிழர் என்ற உரிமையுடன் 'இலக்கு' வாழ்த்துகின்றது

இன்று 06.05.2023ம் நாள் உலகவரலாற்றில் பிரித்தானியாவின் 3வது சார்ள்ஸ் அரசர் முடிசூடிய நாளாகத் தன்னைப் பதிவாக்குகிறது. மாட்சிமைக்குரிய பிரித்தானிய அரசர் 3வது சார்ள்ஸ் அவர்களுக்குப் பிரித்தானியத் தமிழர்கள் சார்பாகவும் இலக்கு ஆசிரிய குழு சார்பாகவும் எமது வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.



ஐக்கிய இராச்சியத்தின் இறைமையின் மீயுயர் சின்னமாக இலங்கும் மாண்பமை 3வது சார்ள்ஸ் அரசராகிய உங்களுக்கு, ஈழத்தமிழர்களை இன அழிப்பில் இருந்து தடுப்பதற்கு ஈழத்தமிழர்கள் பால் உங்களுக்கு உள்ள பொறுப்பையும் கடமையையும் மீள்நினைவுறுத்த விரும்புகின்றோம். இலண்டனின் கிழக்கிந்தியக் கம்பெனி 1796இல் மதராசில் (இன்றைய சென்னை) இருந்து தமிழகத்தையும் ஈழத்தையும் ஒரே அரசியல் அலகாக ஒரே நிதிப்புழக்கத்துடன் ஆட்சி செய்யத் தொடங்கியது முதல் மாட்சிமைக்குரிய 2வது எலிசபேத் அரசி அவர்களின் ஆட்சியில் 22.05. 1972இல் பிரித்தானியாவின் சோல்பரி அரசியல் அமைப்பினைச் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி வன் முறைப்படுத்தி ஈழத்தமிழர்களை அரசற்ற தேசஇனமாக்கும் வரை பிரித்தானியப் பேரரசிடமே ஈழத்தமிழர்களின் இறைமையைப் பாதுகாத்து அவர்களுக்கான பாதுகாப்பான அமைதியான ஆட்சியையும் வளர்ச்சிகளையும் உறுதி செய்யும் பொறுப்பு தொடர்ந்தது என்ற வரலாற்று உண்மையை எங்களின் அரசராகிய உங்களுக்கு மீள்நினைவூட்ட விரும்புகின்றோம்.

1969 ஆண்டில் பிரித்தானியாவின் பிரவிக்கவுன்சில் சிங்களம் மட்டும் சட்டம் இலங்கை அரசாக ஈழத்தமிழர்களின் இறைமையையும் சிங்களவர்களின் இறைமையையும் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறையில் இணைத்து பிரித்தானியா சுதந்திரம் வழங்கிய பொழுது மதங்கள் அல்லது இனங்களுக்கு எதிரான சட்டங்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் பிரிவிக் கவுன்சிலுக்கு மேன் முறையீடு செய்யலாம் என்ற சோல்பரி அரசியல் அமைப்பின் 29(2) வது பிரிவுக்கு எதிரானது என்பதால் அதனை மீள்ஆய்வு செய்யுமாறு அளித்த தீர்ப்பை நடைமுறைப்படுத்தச் சிறிலங்கா தவறியமையே இன்று வரை ஈழத்தமிழர்கள் இனத்துடைப்பு இனஅழிப்பு பண்பாட்டு இனஅழிப்பு என்னும் முந்நிலைப்பட்ட அனைத்துலகக் குற்றங்களைச் சிறிலங்கா தொடர்வதற்கான பலத்தைச் சிறிலங்காவுக்கு அளித்து வருகிறது.

இதனால் சமகாலத்தில் ஈழத்தமிழர்கள் காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினை ஒன்றின் வழி தங்கள் உயிர் உடைமைகள் நாளாந்த வாழ்வுக்கான இனங்காணக் கூடிய அச்சத்தை சிறிலங்காப் படைகளின் வழி அனுபவித்து வரும் உலகின் மக்களினமாக உள்ளனர். எனவே உங்களின் புதிய ஆட்சிக்காலம் கடந்த ஆண்டு ஆரம்பமாகி இன்று பாரம்பரிய முறைப்படி நீங்கள் முடிசூடுகின்ற இந்நாளில் பிரித்தானிய இனத்துவ சிறுபான்மையினமாக உங்களின் குடிகளாக உள்ள நாங்கள் எங்களுடைய ஈழத்தமிழினத்திற்கும் பிரித்தானிய அரசுக்கும் இடை இருந்து வந்த பிரிக்கப்பட முடியாத உறவுகளை மீள்நினைவு கூர்ந்து நாங்கள் இன்று அதே உறவு உணர்வுடன் பிரித்தானிய குடிமக்களாகத் தங்களின் அரசின் உறுதிப்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் நாம் செய்ய வேண்டிய குடிமக்களுக்குரிய சமூக பொருளாதார அரசியல் ஆன்மிகக் கடமைகளைச் செய்வதற்கு எமக்கு உளவியல் தடையாக இருந்து வரும் எமது தாயக மக்கள் இனஅழிப்புக்கு உள்ளாகும் நிலையை மாற்ற உங்களின் தலைமையிலான ஐக்கிய இராச்சிய அரசு மூலமான அனைத்து ஏற்புடைய செயற்பாடுகளையும் செய்து உதவுமாறு பணிவன்பாக நீங்கள் முடிசூடும் இந்நன்னாளில் எங்களின் அரசர் என்ற உரிமையுடன் வேண்டுகின்றோம்.

• • •